விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka
கிளை நூலகம்

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 31 புதன்கிழமை (16.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240


இந்தியாவின் 71ஆவது சுதந்திரதினம் யாழில் நேற்று யாழ். இந்திய துணைத் தூதுவர் நடராஜனின் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

## வாள்வெட்டு; இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவில் மேற்கு பகுதியில் வசிக்கும் 21வயதுடைய இளைஞனே இதில் கைது செய்யப்பட்டவராவார்.

யாழ் குடாநாட்டில் 24

### இறால் பிடிக்கச் சென்றவேளை
## மின்னல் தாக்கியதில் இளம்குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் முகத்துவார கடற்பரப்பில் இறால் பிடிக்க சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்

குருநகர் புதிய கடற்கரை வீதியை சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான பிறான்சிஸ் றொபொன்சன் (வயது 28) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் குருநகர் முகத்துவார கடற்கரைக்கு இறால் பிடிப்பதற்காக மேலும் இரண்டு நபர்க 24

## அரசுக்கு எதிராக போராட்டம்!

(கொழும்பு)

நாளை 17ஆம் திகதி தொடக்கம் ஒருவாரத்துக்கு அரசுக்கு எதிரான போராட்டமொன்றை நடத்துவதற்கு பொது எதிரணியான மகிந்த அணி ஏற்பாடுகளைச் 23

## ஜீ.பி.எஸ் மூலமாக யானைகள் கண்காணிப்பு

(கொழும்பு)

காட்டு யானைகளின் பாதுகாப்புக் கருதி ஜீ.பி.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் அவற்றின் 02

## ஊழல் நிவாரண புதிய பிரிவு

(கொழும்பு)

ஊழல் நிவாரணப் பிரிவொன்றை ஸ்தாபிக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த பிரிவை ஸ்தாபிப்பதன் ஊடாக இலஞ்சம் அல்லது 23

### சம உரிமை, சுயமரியாதை பெறுவதற்கான
# தமிழர் போராட்டங்களுக்கு இந்தியா துணை நிற்கும்
## இந்திய சுதந்திரதின நிகழ்வில் விக்னேஸ்வரன் நம்பிக்கை உரை



(யாழ்ப்பாணம்) நாம் வாழுகின்ற தாயகப் பிரதேசத்தில் சம உரிமை; சுயமரியாதை பெறுவதற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற தமிழர்களின் போராட்டங்களுக்கு இந்தியா என்றும் துணை நிற்கும் என தனது வலுவான நம்பிக்கையை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (22-ம் பக்.)

## பொலிஸ் - மக்கள் தடியடி; பதற்றம்

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள அரச தமிழ் பாடசாலைக்கு அருகிலுள்ள காணிக்குள் நேற்று செவ்வாய்க்கிழமை பௌத்த மதகுரு அம்பி 23

## பொலித்தீன் தடை; தொழில் இழப்பு

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படவிருக்கும் பொலித்தீன் தடையானது நாட்டின் சில்லறை பொருளாதாரம் ஏற்றுமதி 23

## பவளப்பாறைகள் 75 வீதம் அழிவு!

(கொழும்பு)

நாட்டின் பவளப்பாறைகள் வளத்தில் 75 வீதம் அழிவடைந்துள்ளதாக சமுத்திர சூழல் சார் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மனித செயற்பாடுகளே பவளப் பாறை வளம் வழிவடைந்து 02

## மகிந்தவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, மகன் ரோஹித்த நேற்று வாக்குமூலம்
### மற்றைய மகன் யோஷிதவிடம் இன்று விசாரணை





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணை 24

## டெனீஸ்வரனுக்கு எதிரான கட்சி ஒழுங்கு நடவடிக்கை
### 'ரெலோ' ஊடக அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணசபை அமைச்சர் டெனீஸ்வரனுக்கு எதிராக கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இதற்கான கட்சியின் தலைமைக் கூட்டம் எதிர்வரும் 19-ம் திகதி வவுனியாவில் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை வருமாறு. 23

### அரசியல் யாப்பு உருவாக்கத்தில்
## அதிகாரங்களை பகிர்வதற்கு சுதந்திரக்கட்சி எதிர்ப்பு!

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பின் ஊடாக அதிகாரத்தை பகிர்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்ப்பை வெளியிடுவதாக நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட அவர், புதிய யாப்பு உருவாக்கப் பணிகளுக்கு சுதந்திரக் கட்சியின் மகிந்த ராஜபக்ஷ தரப்பு ஒத்துழைப்பு வழங்கப்போவது இல்லை எனவும் வலியுறுத்தினார்.

விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் கூறுகையில்,

புதிய யாப்பு தொடர்பில் வரைபு ஒன்று உருவாக்கப்பட்டு 24

## கலாசார மண்டப கட்டுமானம் 2018 டிசம்பரில் முடிவு பெறும்
### இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார மண்டபப் பணிகள் 2018 டிசம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுவிடுமென இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய சுதந்திரதின நிகழ்வு நேற்று மாலை யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களுக்கு 150 விசைப் படகுகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந)

### இறக்குமதியாகும்
## சீனிக்கான வரி ரூ.8ஆல் அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான விசேட வர்த்தக வரியை நேற்று நள்ளிரவு தொடக்கம் 8 ரூபாயால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் சீனியின் விலை வீழ்ச்சியடைந்தமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 22 - 04 - 1935

விண்ணில் 17 - 07 - 2017



அமரர்

திருமதி **ஞானப்பூ யோசேப்பு (மணி)**

**(நாரந்தனை)**

அம்மா!
உயிர்தந்து, உதிரஞ்சுமந்து உதிரத்தால் அமுதளித்து,
வலிசுமந்து, உனை வருத்தி எம்மை ஆளாக்கி வைத்தாயே!
நீ இல்லை என்ற நிஜம் எம்மை நிலைகுலையச் செய்தாலும்
விண்ணுறையும் வேதனுடன் நீயுறைய, விழி சொரிந்து
விடைதந்தோம்....

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16.08.2017 புதன்கிழமை (இன்று) காலை 11.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியும் தொடர்ந்து இல்லத்தில் இறைவழிபாடும் இடம்பெறும்.

**இல.793 (425), நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர் (C-9343)

## பவளப்பாறை...

செல்வதற்கு காரணமாக அமைந்துள்ளதென அதிகார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி டர்னி பிரதீப்குமார குறிப்பிட்டார்.

இதன் காரணமாக சமுத்திர சூழல் கட்டமைப்பின் சமநிலையில் தாக்கம் ஏற்பட்டு, கடலரிப்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, செயற்கை முறையில் பவளப்பாறைகளை உருவாக்குவதற்கான திட்டமொன்று மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (செ-11)

## ஜீ.பி.எஸ்...

நடமாட்டத்தைக் கண்காணிக்க இலங்கை வனவிலங்குகள்பாதுகாப்புதிணைகளம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த திட்டம் தற்போது தென் மாகாணத்தில் அமைந்துள்ள யால சரணாலயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக திணைக் களத்தின் பணிப்பாளர் சந்தன சூரிய பண்டார ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்படி சிறிய ஜி.பி.எஸ். கருவி ஒன்று காட்டு யானைகளின் கழுத்தில் கட்டப்படுகிறது.

இதன் மூலம் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அப்பகுதிகளில் யானைகளுக்குத் தேவையான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஜி.பி.எஸ். மூலம் பெறும் தகவல்களைப் பயன்படுத்தி யானைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஏனைய சரணாலயங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் சந்தன சூரிய பண்டார கூறினார். (செ-11)

### யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும்-2017

காலம்:20.08.2017 (ஞாயிற்றுக்கிழமை)
மாலை 4.00 மணி

இடம்:வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய வளாகம்

கல்லூரி மற்றும் மாணவர் கல்வி வளர்ச்சியில் ஒன்றிணைந்து பணியாற்ற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயற்குழு,
பழைய மாணவர் சங்கம்

அனுசரணை:-CityHomes.lk, usan, Mirusuvil
Tel:0777683693

(சி-9344)

### கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து). மூளாய்
### ஆண் தொழிலாளி தேவை

எமது வைத்தியசாலைக்கு பொது சுகாதார தேவைக்கு ஓர் ஆண் தொழிலாளி தேவை. சம்பளம் வைத்தியசாலை தொழில் திணைக்கள விதிகளுக்கமைவாக வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 20.08.2017 அன்று காலை 9.30 மணிக்கு தங்களது சுயவிபரக்கோவையுடன் நேரடியாக சமுகமளிக்கவும்.

**-தலைவர்**

(சி-9337)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 07 1933

மறைவு 06 09 2015

திதி : நவமி 16.08.2017



அமரர் **தம்பிஐயா குணநாயகம் (ராசு)**

(உரிமையாளர் குமரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி, கலைவாணி மில் கொக்குவில்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
இனியவராய் வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு இரண்டு மறைந்தாலும் எம்
உள்ளங்களில் என்றும் நீங்காது
நிலைத்திருப்பீர்கள் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

**பலாலி வீதி,**
**திருநெல்வேலி வடக்கு.**

(145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களின் கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

நாட்டில் ஏற்பட்டுள்ள கழிவுகளை அகற்றுதல் தொடர்பான பிரச்சினைக்கு அடுத்த வருடத்தில் நிலையான தீர்வொன்றினை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகக் காணப்படுவதுடன், இவ்வருட இறுதிக்குள் 9 மாகாணங்களிலும் கழிவு முகாமைத்துவத்திற்கான உரிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி நிறைவுசெய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை முறைமைப்படுத்தல்தொடர்பான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு மற்றும் அதனையண்டிய பிரதேசங்களில் கழிவுகளை வெளியேற்றும் செயற்பாடுகளின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளிடம் விசாரித்ததுடன், சுற்றாடல் பாதுகாப்பு தேசிய செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குடிசை வீடுகள் காணப்படும் பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் முறையாக நடைமுறைப் படுத்தப்படாமையின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் பிரசார நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்தல் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்தல் மற்றும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவையின் தீர்மானங்களை நடைமுறைப் படுத்தல் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (இ-3)


சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை

Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்றபடும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# எமக்கு மகிந்தவின் அரசாங்கம் வேண்டும்

# குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முன்பு மக்கள் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்

## கலகம் அடக்கும் படையினர் குவிப்பு







நல்லாட்சி அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முற்பகல் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முன்பு இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காகக் குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையாகியுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

"எமக்கு மகிந்தவின் அரசாங்கம் வேண்டும்" எமக்கு எமது தாய் மீண்டும் வேண்டும்" போன்ற கோஷங்களை எழுப்பியவண்ணம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் குற்றப்புலனாய்வுப்பிரிவுக்குமுன்னாள் ஒன்றுகூடியுள்ளனர்.

அதேவேளை, கலகம் அடக்கும் படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். மேலும் குறித்த பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-3)

## வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன பதவியேற்பு



(கொழும்பு)

புதிய வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தார்

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். (இ-3)

## பெல்ஜியத்தின் துணைப் பிரதமருக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையில் சந்திப்பு

இலங்கைக்கு வந்துள்ள பெல்ஜியத்தின் துணை பிரதமர் டி.குரூஸ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார். அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. (இ-3)



## புலிகளின் முக்கிய தளபதியின் கைத்துப்பாக்கியை விற்க முயன்ற இராணுவ சார்ஜன்ட் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதி ஒருவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும், கைத்துப்பாக்கியை விற்பதற்கு முயன்ற, இராணுவத்தின் விசேட படையணியின் சார்ஜன்ட் தர அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டுத் தயாரிப்பான 9 எம்.எம் ரக கைத்துப்பாக்கி மற்றும் ஆறு ரவைகளை, 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு முயன்ற போதே, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பிரிவு, குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் குழுவால், ராகம மத்துமகல பிரதேசத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறுதிப் போர் இடம்பெற்ற, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், வீரச்சாவடைந்த புலி உறுப்பினரின் சடலத்துக்கு அண்மையில் கிடந்த கைத்துப்பாக்கியையும் ரவைகளையும் தான் மீட்டதாகவும், அதனை, ஒப்படைக்காமல் வீட்டில் மறைத்து வைத்திருந்தேன் என்றும் பொலிஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்ட சார்ஜன்ட், சூதாட்டம் மற்றும் பணம் பந்தயத்தில் அடிமையாகியிருந்ததாக அறியமுடிகிறது. ஆகையால், பல இலட்சம் ரூபாய், கடன் பட்டிருந்தார் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அந்த ஆயுதத்தை விற்பனை செய்வதற்கு, தன்னுடைய நண்பர்கள் ஊடாக, விலைபேசி கொண்டிருந்த வேளையிலேயே, இந்த விவகாரம் தொடர்பில், பொலிஸ் விசேட பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனையடுத்து, ஒரு குற்றவியல் கும்பலின் உறுப்பினராக, வேடமிட்டுக் கொண்டு அவருடைய வீட்டுக்கு சென்ற பொலிஸ் விசேட பிரிவின் அதிகாரி, அவரைக் கைது செய்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் ஆக்கப்பட்டோர்

## உறவுகள் விரக்தி நிலை அடைந்து வெளிநாட்டு தூதுவர்களிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தாம் அனைவரையும் நம்பி ஏமாந்து விட்டதாக தெரிவித்து, விரக்தியின் உச்சத்தில் இருப்பதால் வெளிநாட்டு தூதுவராலயங்களிடம் முறையிடுவதற்காக நேற்றைய தினம் கொழும்புக்கு சென்றுள்ளனர்.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உரிய பதிலை அரசு வழங்க வேண்டும் என கோரி மாவட்டம் தோறும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் காணாமல்போனவர்களுடைய உறவுகள் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் தொடர்ச்சியான போராட்டங்களை ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஆரம்பித்து இருந்தனர்.

ஆனால் இந்த உறவுகளின் கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைக்காத காரணத்தால் பரவலான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இறுதியில் ஜனாதிபதியால் சில உறுதிமொழிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டதன் காரணமாக முன்னெடுக்கப்பட்டிருந்த வீதி மறியல் போராட்டத்தினை இடைநிறுத்தி மீண்டும் தமது கவனயீர்ப்பு போராட்டங்களை தொடர்ந்திருந்தனர்.

ஆனால் ஜனாதிபதியால் தமக்குரிய தீர்வு குறிப்பிட்டகால எல்லைக்குள் வழங்கப்படவில்லை என்றும் தாம் முற்றுமுழுதாக ஏமாற்றப்பட்டு விட்டோம் என தெரிவித்து இன்றைய தினம் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு சென்று இது குறித்து முறையிடவுள்ளனர்.

இதற்காக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இருந்து காணாமல் போனவர்களின் உறவுகள் உள்ளிட்ட 15 பேர் கொண்ட குழுவினர் கொழும்புக்கு பயணமாகியுள்ளனர். (செ-9)


# மரண அறிவித்தல்



## திருமதி கமலநாயகி சர்வானந்தா

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலநாயகி சர்வானந்தா நேற்று *(15.08.2017)* செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் Dr. ந.சர்வானந்தாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி க.சதானந்தனின் அன்பு மகளும் நவாலி வடக்கு காலஞ்சென்ற திரு.திருமதி இ.நடராசாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தர்சினி மற்றும் Dr. கணேஷ்குமாரின் (யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புத் தாயாரும் துஷ்யந்தியின் அன்பு மாமியும் சஞ்சய், சுருதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் திருமதி ம.கனகாம்பிகை, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, காலஞ்சென்ற ந.பரமேஸ்வரன் மற்றும் பேராசிரியர் துரை. மனோகரன், ஜெகதாம்பிகை, தட்சணாமூர்த்தி, சாவித்திரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் பாரதிநாதன் - புனிதவதியின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(16.08.2017)* புதன்கிழமை பி.ப 2 மணியளவில் கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு பி.ப 4 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதி றோட்,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தகவல்: **Dr. ந. சர்வானந்தா**
**Dr. ச. கணேஷ்குமார்**
**(021 221 2117)**

(147)



# அழைப்பு

## யாழ் விருது (2016) நாயகன்

உயர்திரு. **திருநாவுக்கரசு இராசநாயகம்**
**அவர்களின்**

(கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் வடக்கு மாகாண சபையின் பொது நிருவாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும்)

**பணிநயப்பும், "இமயம்" பாராட்டு விழா மலர் வெளியீடும்**
**திரு. தி. இராசநாயகம் அவர்களின் பெயரில்**
**கல்வி உதவி அறக்கட்டளை ஆரம்பித்தலுமான நிகழ்வு**

**காலம்**
19.08.2017 (காலை 10.00 மணி)

**இடம்**
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல விளையாட்டு மைதானம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

சமூக சேவையினால் இமயம் தொட்டு விருது பெற்ற விருது நாயகனை வாழ்த்தி கௌரவிக்க அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இதனைத் தங்களது தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொன் நித்தியானந்தம்**
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி), தலைவர்
மலர் வெளியீடு மற்றும் பாராட்டு விழாக்குழுவும்

(C-9345)



# கேள்வி அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம் - 2017

01. தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி, வட மாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. எனினும் பொதுநிதிச் சுற்றறிக்கை இல. 04/2016 (1) இற்கமைவாக இவ்விலைமனு கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியவாறு பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்விஆவணம** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுளள கேள்விதாரர்கள் **செயலாளர்**, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி. **(தொலைபேசி, தொலைநகல்: 021-2263276 மின்னஞ்சல் (pointpedrops@gmail.com)** இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் மு.ப.09.00 மணிமுதல் பி.ப.14.00 மணிவரை 16.08.2017 - 29.08.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தை ஆங்கில மொழியில **செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி** எனும் இடத்திலிருந்து. 16.08.2017ந் திகதி தொடக்கம் 29.08.2017ந் திகதி வரை காலை 09.00 மணக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி** எனும் முகவரிக்கு 31.08.2017ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக இடதுபக்கமேல் மூலையில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை **தனித் தனியாக** இரு கடித உறையிலிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள்/பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41 (11) /2/7CF/2017- 1 | பருத்தித்துறை பிரதேச சபை தலைமைஅலுவலக கட்டிடத்திற்கான முதலாவது தளம் அமைத்தல் | 9.389 | 4 மாதங்கள் | C7 Building | 94000.00 | 13.12.2017 |

கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 23.08.2017ந் திகதி 14.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி,
வடக்கு மாகாணம்.

(C-9346)

16.08.2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் வெள்ளிவிழா மலர் வெளியீடும் ஆறு.திருமுருகனுக்கு யாழ். விருது வழங்கலும்





















(படங்கள்:- பொ.சோபிகா)

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா நேற்றுக்காலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழுவின் தலைவருமான பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் முதல் அங்கமாக வெள்ளி விழா மலர் நல்லூர்க்கந்தன் ஆலயத்திலிருந்து பருத்தித்துறை வீதி, கோவில் வீதி மற்றும் நாவலர் வீதி ஊடாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நாவலர் மண்டபத்தையடைந்தது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை சைவ சமய விவகாரக் குழுவின் செயலாளர் பு.ஆறுமுகதாசன், தலைமையுரையினை மாநகர ஆணையாளர் பொ.வாகீசன், ஆசியுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் ஆகியோர் வழங்கினர்.

விழாவின் விசேட நிகழ்வாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுரு கனுக்கு யாழ்.விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை வடக்கு ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வழங்கினார். இதனையடுத்து நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுரையினை பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம், ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் வழங்கியிருந்தனர். மலரின் முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் பெற்றுக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து சைவசமய விவகாரக் குழுவில் தொண்டாற்றியவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றதுடன் யாழ். மாநகரசபையால் நடத்தப்பட்ட சைவ நெறி போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக் கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டதுடன், பேராசிரியர்கள், சைவ சமய பெரியார்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நன்றியுரையை சைவசமய விவகாரக் குழுவின் பொருளாளர் நா.ரகுமார் வழங்கினார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 12 ஆம் திகதி நல்லூர் வைமன் வீதியிலுள்ள செயல் திறன் அரங்கில் அரிச்சந்திர மயான காண்ட இசை நாடகம் நடை பெற்றது. (படங்கள்:-இ.சிந்துஜா)

# கலைஞர்களுக்கு உதவி வழங்க விண்ணப்பங்கள் கோரல்

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கலைஞர்களுக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் உதவி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச கலாசார அதிகாரசபையில் அங்கத்துவமுடைய கலைஞர்கள் 55 வயது தொடக்கம் 77 வயதிற்குட்பட்டவர்கள், மாதாந்த வருமானம் 7500 ரூபாவிற்கும் குறைந்தவர், 15 வருடங்களுக்கு மேல் கலைப் பணியாற்றிய அரச உதவி இதுவரை பெறாத கலைஞர்கள் இவ் உதவிக்காக விண்ணப்பிக்க முடியும்.

உடுவில் பிரதேச கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரிடம் விண்ணப் பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 28.08. 2017 இற்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# நோயாளியை அடையாளம் காணுங்கள்

யாழ். போதனா வைத்தியசாலையில் 12.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.50 மணியளவில் ஐம்பது வயது மதிக்கத்தக்க பொது நிறமுடைய ஆண் குளப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் (பெயர், முகவரி, வயது தெரியாது) அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் இவருடைய உடல் நிலை தற்போது கவலைக்கிடமாகவுள்ளதால் உறவினர்களை வந்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-60)



நல்லூரான் பக்திப்பாமாலை எனும் இறுவெட்டு அண்மையில் நல்லூர் வீதியிலுள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் தெய்வீக இசைச்சங்கமத்துடன் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் சமயகுருமார்கள், சமயப்பெரியோர்கள், மாணவர்கள், நல்லூர்க் கந்தன் மெய்யடியார்கள், பக்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# சதுர்த்தி

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி விரதம் எதிர்வரும் 25.08. 2017 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை இடம் பெற்று விநாயகப் பெருமான் உள் வீதி , வெளி வீதி வலம் வருவார். (இ-3)




# மேய்ச்சலுக்கு போகும் கால்நடைகள் இறைச்சியாக்கப்படுவதாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகள் இறைச்சிக்காக திருடப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகளை பிடித்து காட்டுப் பகுதியில் வைத்து இறைச்சியாக்கப்பட்டு வேறு பிரதேசங்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுவதாகவும் இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்ட போதும் இது வரை நடவடிக்கை எடுக்கப் படாதது வருத்தமளிப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-10-103)



2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் அருணலு பரிசளிப்பு விழா சங்கானை கொமர்ஷல் வங்கியில் அண்மையில் கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்ட கல்வி அதிகாரி நொபேட் உதயகுமார், சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் இராமச் சந்திரா சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டு இந் நிகழ்வை சிறப்பித்தனர். இந் நிகழ்வின் போது 15 மாணவர்கள் வங்கியால் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# நல்லூர் உற்சவ கால பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தில் யாழ். சின்மயா மிஷன், பாடசாலை மாணவர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களை இணைத்து காலை, மாலை இரு நேரமும் சுவாமி வீதி உலா வரும் போது பஜனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பான கூட்டம் யாழ. வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடை பெற்ற போது பங்குபற்றத் தவறிய பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், இப் பஜனையில் தமது பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொள்ள விரும்பினால், 077 337 8665 மற்றும் 077 691 4170 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, விபரங்களை அறிந்து, தங்களுக்கான தினத்தை பதிவு செய்து கொண்டு, அத் தினத்தில் பங்கு கொள்ளலாம் என அறியத்தருகின்றோம். (இ-3)




ஊரெழு கிழக்கு அமரர் சின்னட்டியன்- பசுபதி ஞாபகார்த்த நிதியத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் பொது நோக்கு மண்டபத்தில் ஓய்வு நிலை அதிபர் கவிமணி க. ஆனந்தராசா தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வலி.கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி-மதியழகன் மங்கல விளக் கேற்றுவதையும் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்ற மாணவி ஒருவருக்கு உரும்பிராய் சமநல சேவை நிலையத்தின் சமநல உத்தியோகத்தர் எஸ். குலத்துங்கன் நிதி அன்பளிப்பு செய்வதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



*2015 ஆம் ஆண்டு ஒரு முக்கிய ஆண்டு என்று கூறுவதில் தவறில்லை. ஜனாதிபதித் தேர்தல் நடந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்பதற்கு அப்பால் பொதுத்தேர்தலும் இந்த ஆண்டுதான் நடைபெற்றது.*

*அதேவேளை வடபுலத்து தமிழ்மக்கள் அதிர்ந்து போகுமளவில் மிகப் பெரும் கொடூரச் சம்பவம் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் நடைபெற்றது. அதுதான் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை.*

*மாணவி வித்தியாவின் படுகொலை இலங்கையை மட்டுமல்ல இலங்கை என்ற எல்லை கடந்து வெளிநாடுகளிலும் அதன் பாதிப்பு உணரப்பட்டது.*

*உண்மையில் போருக்குப் பின்பு வடபுலத்தில் தன்னிலை உத்வேகம் கொண்டு இளைஞர்களும் பொதுமக்களுமாக களமிறங்கி த்மது எதிர்ப்பைக் காட்டியது மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவத்தின் போதுதான் என்பது இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.*

*இது தொடர்பில் வலம்புரி ஒரு விரிவான பதிவை 2015 ஆம் ஆண்டு எழுதியிருந்தது. இப்போது வித்தியாவின் படுகொலை வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கின்ற வேளையில் அந்தத் தொடரை இவ்விடத்தில் மீள் வாசிப்புக்கு உட்படுத்துவது பொருத்தம் எனக் கருதப்படுவதால் வித்தியாவின் படுகொலையும் அதன் பின்னர் நடந்த சம்பவங்களும் தமிழர் தலைவிதி என்ற இத்தொடருக்குள் இணைக்கப் படுகின்றது.*

12 மணித்தியால நேரம் ஓயாத வேலைப்பளுவில் களைத்த கதிரவன் மேற்கு வானத்தில் உறங்கவும் ஓய்வெடுக்கவும் சென்ற வேளை, இருள் சூழ்ந்த அந்துப் பொழுதில் பண்ணை வீதி எங்கும் ஒரே மின்மினிப்பூச்சிகளின் அசைவு போல வாகனங்களின் பவனி.

ஆம், தொழில் நிமிர்த்தம் காலைப்பொழுதில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தீவக மக்கள் மீளவும் தங்கள் தாயகம் திரும்புகின்ற காட்சிதான் இது. பண்ணை வீதி எக்காலத்திலும் மின்குமிழ் ஒளியைக் கண்டதில்லை.

ஆனாலும் இராப்பொழுதில் அந்த வீதி இருண்டு கிடந்ததுமில்லை. வாகனத் தொடரணியில் பாய்ச்சப்படும் வெளிச்சமே பண்ணை வீதியின் கதிரொளி.



## புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

மண்டைதீவு, அல்லைப் பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, நாரந்தனை, கரம்பொன், ஊர்காவற்றுறை என தீவகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை...

யாழ்ப்பாண நகர வர்த்தகம் தீவகத்தின் ஆட்சியில் இருந்த அந்தக் காலம். வர்த்தகப் பெருந்தலைகளின் பெறுமதியான கார்கள் பண்ணை வீதியால் ஊர் நோக்கிச் செல்கின்ற அந்தக் காட்சியை நினைக்கும் போது அட, அதொரு காலம் என்று சொல்லிக் கண்களைத் துடைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாது.

ஆம், 1990, 1991களில் தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு தீவகத்தின் அடித்தளத்தை உடைத் துச் சின்னாபின்னமாக்கிற்று. இப்போது தீவகம் கலகலப்பற்ற மண்.

பணிநிலைக்காக அங்கு செல்பவர்கள் தங்களின் கடமை நேரத்தில் ஐந்து ஆண்டுகள் முடிய இடமாற்றம் தந்தேயாக வேண்டும் என்ற கணக்கெடுப்பையும் தங்கள் கடமையோடு சேர்த்துக் கொண்டனர்.

எல்லாவளமும் நிறைந்த தீவகத்தின் தற்போதைய அவலம் என்ன? அறிவதற்குக்கூட ஆர்வம் அற்றதான மனநிலையே முன்னைய தீவகத்தாரின் நிலைமையாக இருக்கிறது.

புங்குடுதீவு அதோ! இலங்கைத் தீவின் மிக நீண்ட தாம்போதி என்ற பெருமையைத் தனதாக்கிய வேலணை- புங்குடுதீவுப் பாலம். அந்தப் பெருமையோடு புங்குடு தீவின் தலைவாசலில் காத்திருக்கும் மடத்துவெளி பிள்ளையார்.

நாற்சார வீடுகளின் அலங்காரம். பூவரசம் பூக்களின் மங்கல வரவேற்பு. பாடசாலைகள், ஆலயங்கள், அரங்குகள், ஓ! புங்குடுதீவு வர்த்தகப் பெருமக்கள் வாழும் பொன்னகரம் என்று புகழப்படலாயிற்று.

அந்தப் புகழ் நீண்டு நிலைக்காமல் போனதுதான் வேதனை. இன்று பூவரசுகளும் பூக்க மறுத்த பூமியாக புங்குடுதீவு காட்சி தருகிறது.

குடியிருந்த வீட்டை விட்டுப்போன சரிதங்கள், வாழ்ந்த வீடு இருக்கட்டுமே என்று நினைத்தபோது அடுத்தவர் அதை உடைத்து எடுத்த வேதனை தாங்க முடியாமல் எஜமானர்களின் வருகைக்காக ஏங்கிக் கிடக்கும் எச்சசொச்சங்கள்.

இதற்குள்ளும் ஒரு மீள் குடியமர்வு சொந்த ம்ண்ணில், சுத்தமான காற்றின் சுவாசத்தில் நிம்மதி என்ற நினைப்பும் பொருளாதாரத்தின் மட்டுப்பாடும் புங்கை மண் தனக்கும் புத்திரர் உண்டென்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது.

மாணவர்களின் பற்றாக் குறையோடும் பாடசாலைகள் இயங்கின. இறைவா! என்று சொல்வதற்கு ஆளில்லையாயினும் ஆலய மணிகள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

இருந்ததையெல்லாம் இழந்த சோகத்தோடு இயங்கும் புங்குடுதீவு மண் அன்றும் கதிரவனின் வருகையோடு விழித்துக்கொள்கிறது.

வெட்டுமுறை தவறிய பனைகளும் இராப்பொழுதில் தன் காவோலைகளை உதறியடித்து உறக்கத்தில் இருக்கும் மக்களை வெருட்டுகின்ற வழமையில் விடி தல் என்பது நிம்மதியைத் தருகின்ற பொழுதாகவே உணரப்பட்டது.

விடிதலோடு உற்சாகம் அடையும் அந்த ஊர் அன்றும் அதே உற்சாகத்தோடு களை கட்டுகிறது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான புகையிரதக் கடவை அமையுங்கள்; புகையிரதத்தை வழிமறித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்







புகையிரதப் பாதைகளில் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்கக் கோரி புகையிரதத்தை வழிமறித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இதன் காரணமாக அரைமணி நேரம் புகையிரத சேவை பாதிப்படைந்தது.

வவுனியா, தாண்டிக்குளம் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்பாக காலை 8.05 மணியில் இருந்து 8.35 வரை குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையிலான புகையிரதப் பாதையில் பல இடங்களில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை காணப்படுகின்றது. இதன் காரணமாக கடந்த 3 மாதங்களில் குறித்த பகுதிகளில் நான்கு விபத்துக்கள் ஏற்பட்டு 5 பேர் மரணமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கொழும்பில் இருந்து யாழ்.சென்ற புகையிரதம் ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் மரணமடைந்திருந்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத்தை வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வழிமறித்த மக்கள் அப்பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் புகையிரதக் கடவை முன்னர் பாதுகாப்பானதாக இருந்த போது விபத்துக்கள் தடுக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது பாதுகாப்பான கடவை நீக்கப்பட்டு சமிக்ஞை விளக்குள் மட்டுமே பொருத்தப்பட்டுள்ளதாகவும் நாற்சந்தியாக அமைந்துள்ள குறித்த பகுதியில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குகள் அவ் வீதி வழியாக பயணிப்பவர்களுக்கு ஒழுங்கான முறையில் தெரியவில்லை எனவும், தமக்கு பாதுகாப்பு கடவையே தேவை எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புகையிரதத் திணைக்களம் மற்றும் மாவட்ட அரச அதிபருக்கும் முன்னர் எழுத்துமூலம் தாம் தெரியப்படுத்தியிருந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இப் போராட்டத்தில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் நாள் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் அப்பகுதியைச் சேர்ந்தவர்களை உடனடியாக அக் கடவையில் கடமையில் அமர்த்துவதாகவும், இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் கூடி இறுதி முடிவுகள் எடுப்பதாகவும் பொலிஸ் தரப்பு வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக யாழில்இருந்துகொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதித்தே பயணத்தை தொடர்ந்தது. (8-250)

## இராணுவத் தளபதியை கண்ணீர்விட வைத்த காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் கண்ணீர்

(வற்றாப்பளை)

இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்களே இவ்வாறு வழிபட்டுள்ளனர்.

இந்நிலையில் 64 ஆவது படைப்பிரிவு இராணுவத்தளபதி ஒருவர் ஆலய வழிபாட்டிற்காக அங்கு சென்றிருந்தார்.

இதன்போது காணாமல் போனோரின் உறவுகள் தமது பிள்ளைகளை கண்டு பிடித்து தருமாறு கண்ணகி அம்மன் முன்னிலையில் கண்ணீர் வடித்து அழுதுள்ளனர்.

இச்சம்பவத்தை பார்த்து கண்கலங்கிய இராணுவத் தளபதி காணாமல் போனோரின் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், ஆறுதல் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-8)




## கிளிநொச்சியில் மின்வசதியின்றி 1000றக்கும் மேற்பட்ட குடும்பங்கள்



கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் ஆயிரத்து 176 குடும்பங்களுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலைப் பகுதியில் மக்கள் மீள்குடியேறி ஒன்பது மாதங்களாகியுள்ளபோதும், தமக்கான மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தரவில்லை என அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மின்சார வசதியின்மையால் மீள்குடியேறி தற்காலிக வீடுகளில் வாழும் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதால், இப்பகுதி மக்கள் தமக்கான மின்சார வசதிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடி யேறியுள்ள குடும்பங்களு க்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருப்பதாகவும், விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## காசோலை வழங்கி வைப்பு



வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரனால் அண்மையில் ஆலயங்களுக்கான காசோலைகள் தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது துணுக்காய் பிரதேச செயலகத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதி அவைத் தலைவர் க.வ. கமலேஸ்வரன், வடக்கு மாகாண உறுப்பினர் இ. இந்திரராசா மற்றும் கலாசார உத்தி யோகத்தர்கள், ஆலய பரிபாலன சபை உறுப்பி னர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (8)

## பச்சிலைப்பள்ளியில் அபிவிருத்தித் திட்டம்

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 39 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த திட்டம் 57.08 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், யுத்தத்தின் பின்னர் மீள் குடியமர்வையடுத்து மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இந்நிலையில், மீள் குடியேற்ற அமைச்சினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் ஐந்து சிறு குளங்களை புனரமை ப்பதற்கும், நான்கு உவர் நீர்த்தடுப்பணை களை புனரமைப்பதற்குமான ஒன்பது வேலைத் திட்டங்களுக்கு 23 மில்லி யன் ரூபா செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், விவசாய அமைச்சினூடாக ஆறு சிறிய குளங்களை புனரமைப்பதற்கும், 13 சிறிய குளங்களை ஆழப்படுத்துவதற்கும் என 19 வேலைத்திட்டங்களுக்கு 31 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

மேலும், கமநல அபிவிருத்தி திணைக்களத்தினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் உள்ளூரில் காணப்படும் 10 குளங்களை புனரமைப்பதற்கும் கைவிடப்பட்ட ஒரு குளத்தினை சுத்தம் செய்வதற்கும் 3.8 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (3-8)

## உதவி வழங்கல்



இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" விசேட செயற்றிட்டத்தின் கீழ், போரால் பாதிக்கபட்ட சோழநிலா கிராமத்தில் இருந்து விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, போரில் தாய் அல்லது தந்தையரை இழந்து போரில் பாதிக்கப்பட்ட 20 மாணவர்களுக்கு 25000/=ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதனை சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் விசேட செயற்குழுவினர் நேரில் சென்று கையளித்தனர்.(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தில் மூழ்கியது மன்னார் மடுமாதா ஆலய வளாகம்



மன்னார் மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்க மடு மாதா ஆலய திருத்தலத்தின் வளாகத்தில் வெள்ளம் நிரம்பியுள்ளது. ஆலய வருடாந்த உற்சவத்திற்கு வருகை தந்த இலட்சக்கணக்கான மடு அன்னையின் பக்தர்கள் அங்கே காணப்படுகின்ற பொதுமண்டபங்களிலும் ஆலயத்தின் உள்ளேயும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

(படங்கள்:-வசந்தன், வசந்தரூபன்)

# குளங்களை புனரமைத்து அபிவிருத்தி செய்யுங்கள்

## மக்களின் எதிர்பார்ப்பு இது



கிளிநொச்சி மாவட்டத்தில் பல குளங்கள் காணப்படுகின்ற போதிலும், குறித்த குளங்களை அபிவிருத்தி செய்து விவசாயம், நன்னீர் மீன்பிடிகளை ஊக்குவிப்பதுடன் நிலத்தடி நீரையும் பாதுகாக்க முடியும் என்பதே எமது முன்னோர்களின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு பல குளங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அவை அபிவிருத்தி செய்யப்படாமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டே வருகின்றனர்.

கிளிநொச்சி குடமுருட்டி குளம் என அழைக்கப்படும் சின்னபல்லவராயன் கட்டு குளத்தினை நம்பி 300 இற்கும் மேற்பட்ட சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து வரும் அதே வேளை 100 மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

குளத்தின் முதலாம் கட்ட அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் பிற்பட்டகாலத்தில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்தமையால் 321 ஏக்கர் செய்கை கைவிடப்பட்டதுடன், நன்னீர் மீன்பிடியும் பாதிக்கப்பட்டிருந்தது.

குளத்தினை ஆழப்படுத்தி குடமுருட்டி ஊடாக செல்லும் மழை நீரை முழுமையாக தேக்குவதற்கான அடுத்த கட்ட அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுமாயின் அப்பகுதியில் மேலும் அதிக செய்கை செய்யப்படும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு தொடரும் வரட்சி காரணமாக அப்பகுதியில் உள்ள மக்களின் குடிநீர் பிரச்சினை கூட பாரிய சவாலாகவே காணப்படும் என்பது மக்களின் கருத்தாகும்.

குறித்த குளத்தினை அபிவிருத்தி செய்தால் நல்லூர் உள்ளிட்ட பல பகுதிகளுக்கு சிறுபோகம் செய்கை பண்ணக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் பூநகரி பிரதேசத்திற்கான குடிநீர் பிரச்சினையை சற்றேனும் தீர்க்க முடியும் எனவும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மாவட்டத்தின் பல குளங்கள் போதுமான அபிவிருத்திகள் இல்லாது தொடர்ந்தும் காணப்படுகின்றமையால் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பல்வேறு சவால்கள் காணப்படுகின்றமை நிதர்சனமான உண்மையாகும்.

வடக்கின் இதயம் எனவும் விவசாய மாவட்டம் எனவும் அழைக்கப்படும் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் மும்மொழியப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வியலாளர்கள், பிரதேச மக்களின் எதிர்பார்பாகும். (8)

# 38 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு



கிளிநொச்சிமாவட்டத்தில் 38 ஏக்கர் காணி நேற்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது. இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்த 38 ஏக்கர் காணி விடுவிப்பு தொடர்பிலான ஆவணங்களை நேற்று இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்திருந்தனர்.

கரைச்சி, கண்டாவளை பகுதியில் உள்ள தனியார் காணிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அவை இனம் காணப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன்போது கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர்களும்அங்கு இருந்தமை குறிப்பிடதக்கதாகும்.(8-312)

# ரக்ஷா பந்தன் நிகழ்வு இன்று

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தால் நடத்தப்படும் புனிதநூல் (ரக்ஷா பந்தன்) அணிவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு வட்டுவாகல் முல்லைத்தீவில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் இடம்பெறும்.

இந்தியாவிலிருந்துவருகை தந்துள்ள பிரம்மகுமாரி கவிதாவின் விசேட உரை இடம் பெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு அழைக்கின்றனர் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர். (3-8)




# வவுனியாவில் வைத்தியசாலை முற்றுகை

## மருந்துப் பொருட்கள் பறிமுதல்



வவுனியாவில் இயங்கி வந்த வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினரால் சுற்றிவளைக்கப்பட்டு மருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இயங்கிவந்த பதிவு செய்யப்படாத வைத்தியசாலை ஒன்றை நேற்று வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.லவன் தலைமையில் சென்ற குழுவினர் அதிரடியாக சுற்றிவளைத்து சோதனை நடத்தினர்.

குறித்த வைத்தியசாலை சில காலமாக வவுனியாவில் இயங்கி வந்த நிலையில் சுகாதாரப் பரிசோதகர்களால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளதுடன் மருந்துப்பொருட்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சுற்றிவளைப்பு குறித்து கருத்து தெரிவித்த வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.லவன்,

குறித்த வைத்தியசாலையானது எமது திணைக்களகத்தில் பதிவு செய்யப்படவில்லை. இந்த மருந்து வகைகள் எவ்வாறானவை என்று தெரியவில்லை. அதன் காரணமாக மருந்துகள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதுடன், மருந்துகள் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளது எனக் குறிப்பிட்டார்.

குறித்த வைத்தியசாலையின் மருத்துவர் கே.கோகுல் ராஜ் கருத்து தெரிவிக்கையில்,

எனது வைத்தியசாலை கோமியோபதி வைத்திய நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க வர்த்தமானியில் பெயர் இருப்பதாக குறிப்பிட்ட வைத்தியர் கிளிநொச்சி மற்றும் குருநாகல் போன்ற பகுதிகளில் தங்கள் கோமியோபதி வைத்தியசாலை இயங்கிவருவதாகவும்சட்ட நடவடிக்கைக்கு முகங் கொடுக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (8)

# ஒருநாள் செயலமர்வு

(கிளிநொச்சி)

புலமைசார் குறைபாடுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர்கள் ஆகியோருக்கான ஒருநாள் செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு கல்கிசையிலுள்ள புலமைசார் குறைபாடு உடையோருக்கான நலன்புரிச்சங்கம் இந்த ஒருநாள் செயலமர்வை நடத்தவுள்ளது.

இச் செயலமர்வில் மனநலம் குன்றியோரை அடையாளம் காணுதலும் ஆரம்ப தலையீட்டின் முக்கியத்துவமும், மனக் கோளாறுகளை அடையாளம் காணுதலுடன் விசேட கல்விக்கான முக்கியத்துவமும் நடைமுறையிலுள்ள அரச உதவி வளங்களை அடையாளம் காணுதல், மனநலம் குன்றியோர்களை பராமரித்தலில் உள்ள சவால்கள், தொழில் சிகிச்சையின் புறச்சரீர சிகிச்சையின் முக்கியத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பாக அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரை ஆற்றப்படவுள்ளது.

கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் விசேட கல்வி பிரிவிலுள்ள இத்தகைய மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் இச்செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலந்து கொள்ள விரும்பும் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் 021 228 3363 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயலமர்வுகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இச் செயலமர்வு 6 மாதங்களுக்கு முன்பாக கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தில் வட மாகாணத்தின் அனைத்து மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்கள், சமூக சேவைகள் அலுவலர்கள், இத்தகைய பிள்ளைகளை பராமரிக்கும் இல்ல நிர்வாகிகள் ஆகியோருக்கு நடத்தப்பட்டது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




## உணவே மருந்து

சித்தமருத்துவமானது மக்களின் வாழ்க்கை முறையையும் சமய கலாசாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. அதில் பாரம்பரியமான சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே தமிழர்களின் உணவு முறையில் மருத்துவ சம்பந்தமான பல உண்மைகள் அடங்கியுள்ளன. மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் நோய் நிலைமைகளிலும் உடல், உள ஆரோக்கியத்தை பேணுவதற்குரிய உணவு முறைகளை சித்தமருத்துவம் நிறையவே எடுத்தியம்பியுள்ளது.

நல்ல ஆரோக்கியமான உணவை உட்கொள்வது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். ஆகாரம், நல்லுறக்கம், உடற்பயிற்சி, நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கைமுறை என்பன அத்தியாவசியமாகின்றன. ஸ்தூல பிராணனான உணவானது சூட்சும பிராணனை உடலில் நிலைநிறுத்தி வைக்க உதவுகின்றது. உணவில் பொதுவாக அறு சுவைகளும் இன்றியமையாதவை ஆகும். அதிலும் கைப்புச் சுவையுள்ள உணவுகளை கட்டாயம் சேர்த்துக் கொள்ளல் அவசியம். கைப்புச் சுவையான உணவுகள் மூன்று நேர உணவிலும் இருத்தல் அவசியமாகும். கைப்புச் சுவை எமது உடற் கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை புதுப்பிக்க அவசியமாகின்றது. மேலும் சாப்பிடுகின்ற உணவுகளை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். பழைய காலத்தில் இருமுறை உணவுப் பழக்கமே இருந்துள்ளது. இப்போது அது பல முறையாக மாறிவிட்டது. உண்ணும்போது கீழ்க்கண்ட கருத்துக்களை மனதில் வைத்திருப்பது நல்லது. "உணவை சாப்பிடும் போது எப்படிச் சாப்பிட வேண்டும்" என சித்த மருத்துவம் அழகாக எடுத்துரைத்துள்ளது.

பத்தியமான உணவையும் அபத்தியமான உணவையும் ஒருவன் கலந்து சாப்பிட்டால் அதற்கு "சமா ஸனம்" என்று பெயர் ஆகும்.

''சமாஸனம்'' என்றால் உடம்பிற்கு வேண்டிய உணவையும் தோசம் தரக்கூடிய







உணவையும் சேர்த்து தாறுமாறாகச் சாப்பிடுவது.

"அத்யஸனம்" என்றால் அளவிற்கு அதிகமாக சாப்பிடுவது (Over eating) பட்டினியால் ஏற்படுவதை விட அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதாலேயே நோய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன என்பதுதான் உண்மை. "விஷமாஸனம்" என்றும் ஒன்றுள்ளது. அதாவது உணவை விஷமமாகச் சாப்பிடுவது. எந்த நேரத்தில் சாப்பிட வேண்டுமோ அதைவிட்டு விட்டு அகாலத்தில் சாப்பிடுவது "விஷமாஸனம்" ஆகும். அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது, குறைவாகச் சாப்பிடுவது, அல்லது ஒழுங்கீனமாக உட்கார்ந்து சாப்பிடுவ்து ஆகியவற்றை தவிர்த்தல் வேண்டும்.

ஆரோக்கியமான நிலையில் ஒருவருக்கு தரமான, போசாக்கான உணவு எவ்வளவு அவசியமோ அதே போன்று நோயுற்ற நிலையில் பத்திய உணவு அவசியமாகின்றது. நீண்டகாலத்திற்கு நிலைத்து நின்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களை பொறுத்தவரையில் மருந்துகளிலும் பார்க்க ஒருவர் தனது உணவு முறைகளை மாற்றி அமைத்துக் கொள்வதே சிறந்தது. இதனால் குறிப்பிட்ட நோய்கள் மேலும் விருத்தியடையாமல் தடுக்கலாம்.

இதில் நீரிழிவு, மாரடைப்பு, குடற்புண், மூலநோய்கள், வாதநோய்கள் போன்றன அடங்கும். அக்னி வாயுவாகிய பகவானுக்குநாம்அளிக்கக் கூடிய உணவானது அன்னரஸமாக மாறி அது உடலுக்கு புஸ்டியைத் தருவது மட்டுமல்லாமல் மனோபலத்தையும் பாதிப்பதால் சாப்பிடும் முறையை சிரத்தையுடன் செய்ய வேண்டும்.

மேலை நாட்டிலே சாப்பிடுவது என்பது சமூக நிகழ்வு (Social Event) ஆகிவிட்டது. வெளி இடங்களில் கூடப் பேசிக் கொண்டே சாப்பிடுவார்கள். ஆனால் நம் நாட்டில் அது ஒரு சமயாசார நிகழ்வு (Ritual act). அமைதிய க உட்கார்ந்து பரமாத்மாவைத் தியானித்து ஒவ்வொரு கவனத்தையும் தெய்வமாக மதித்துச் சாப்பிடுதல் வேண்டும்.

சாப்பிடும் போது முதற் கவளத்தை நெய் கலந்து சாப் பிட வேண்டும். வயிற்றிலுள்ள அக்னியை முதலில் நெய்விட்டுஉத்தீபனம் செய்ய வேண்டும். இரைப்பையில் நான்கில் இரண்டு பகுதியில் அன்னத்தையும் ஒரு பகுதியில் பானத்தையும் நிரப்ப வேண்டும். மற்றுமொரு பகுதியை வாயுவிற்கு விட்டு விட வேண்டும். சாப்பிட்ட பின்பு தான் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்னாலோ இடையிலோ குடிக்கக்கூடாது.

"இடையில்குடியேல் கடையில் மறவேல்'' என்பது முன்னோர் வாக்கு. முற்காலத்தில் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து ஆறியதும் இறக்கி ஒரு மண்பானையில் இட்டு சிறுதுண்டு சுக்கு, கருந் துளசி இலை போட்டு மூடி வைப்பார்கள். இது பருகுவதற்கு இலேசாகவும் ஆரோக்கியத்தை பேணவும் உதவும்.

''நீர் சுருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி உண்பவர் தம் பேருரைக் கப் போமே பிணி'' அதாவது நீரை நன்கு கொதிக்கவைத்து(சுருக்கி) மோரை நன்கு நீர் விட்டுக் கரைத்தும் நெய்யை உருக்கியும் உண்டால் பிணிவராது என்பதாகும்.

முக்கியமாக பதப்படுத்தப் பட்ட உணவுகளை. தவித்துக் கொள்ளல் வேண்டும். சில முக்கியஉணவுக்கூறுகள்வாயினால் மென்று சாப்பிடுவதாலும் மேலும் வயிற்றிலுள்ள அக்னியாலும் உடைக்கப்படுகின்றன. முக்கியமாக தாவர பட்சணிகளாகிய மிருகங்களும் இரையை மீட்டு அசை போட்டு மென்று இத்தகைய முயற்சியை நிறைவாக்கி கொள்கின்றன. ஆயினும் மனிதன் ஏனைய விலங்குகளைப் போலல்லாது தனது உணவைப் பதப்படுத்தி உண்பதால் அவன் உட்கொள்ளும் உணவுக் கூறுகளில் அடங்கியுள்ள நார் மூடிகள் அகற்றப் பட்டு விடுகின்றன. இத்தகைய பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்த்து இயற்கையில் காணும் எல்லாப் பழங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள் முதலானவற்றை மென்று சாப்பிட வேண்டும். ஏனெனில் அவற்றில் நார்ப்பொருட்கள் அடங்கியுள்ளன.

உள்ளெடுக்கும் சக்திகளை கட்டுப்படுத்துதலும் அவசியமாகின்றது. நாம் அனைவரும் எமது உணவை சுவைத்து, ரசித்து உண்கிறோம். ஆனால் அநேகமானோர் மிகக் குறுகிய நேரத்தில் தமது உணவை உண்பதை அவதானிக்கலாம். அண்மைக்காலமாக தொலைக்காட்சிப்பெட்டி முன் அமர்ந்து உணவை மென்று விழுங்காது அவசர அவசரமாக விழுங்கும் பலரையும் காண்கிறோம். திருப்தி ஏற்பட்டதும் நாம் உணவு உண்பதை நிறுத்துகிறோம். திருப்தினனும்நிலைப் பாட்டை எம்மால் திட்டவட்டமாக அறிய முடியாமல் இருக்கிறது. திருப்தி ஏற்படுவதற்கு காரணியாக,

வாயிலிருந்து சிறுகுடலுக்குச் செல்லும் குழாயினது அசையும் நிலை, சிறுகுடலும் வயிறும் பருத்தல் (ஊதுதல்), இரத்த குளுக்கோ சின் நிலை உயர்தல், இன்சுலின் அதிகமாக சுரத்தல் இவற்றை, நார்கள் வாயினதும் வாயிலிருந்து சிறுகுடலுக்கு செல்லும் குழாயினதும் அசைவை அதிகரிக்கும், தவிட்டுடன் கூடிய அரிசி, மண்ணிறப்பான், குரக்கன், சோளம், வரகு, திணை, சாமை முதலியவற்றில் தயாரித்த உணவுகள் விழுங்குவதற்கு அதிகம் முய ற்சிக்க வேண்டும். அதன் ருசியும் குறைவாகும், சிறுகுடல், வயிற்றையும் விரிவடையச் செய்யும், அதிக நீரை தாங்கி, அதிகம் நீரை உறிஞ்சும் தன்மையையும் உண்டாக்கும்.

நார்கள் அதன் நிறையின் பன்மடங்கு நிறையுள்ள நீரை உறிஞ்சி உணவை பருமனாக்கும். எனவேதான் சித்த மருத்துவம் கூறும் உணவு முறைகளில் இவ் வகையான தானியங்கள் சேர்ந்த கூழ், கஞ்சி, அடை, இலைசேர்பிட்டு வகைகள் முக்கிய இடம்வகிக்கின்றன.

நாம் உண்ணும் உணவு எத்தகையதோ அதுபோலத் தான் நம்முடைய தன்மைகளும் இருக்கும். உணவு என்பது உடம்பை போசாக்கு செய்வதற்கு மட்டுமல்லாது மன நிலையையும் நிர்ணயிக்கின்ற விடயமாகவும் அமைகின்றது.

ஒருவன் இலைவகை , கனிகள், பால்,நெய் தானிய வகைகள் போன்றவற்றை மிகச் சரியான அளவில் சாப்பிட்டு வருவாரென்றால் அவனுடைய மன நிலை அமைதியாக இருக்கும். அவனுடைய குணமும் சாத்வீகமாக இருக்கும். காரம், புளி, உப்பு, எண்ணெய்ப் பண்டங்கள் அதிகமாகச் சாப்பிடுபவனின் மன நிலை ராஜசிகமாக இருக்கும். அசுத்தமான, புளித்துப் போன உணவுகளை சாப்பிட்டால் தாமஸிகமாக இருப்பான்.

எமது மக்கள் அதிகமாக காய்கறிகள் எனக் குறிப்பிடுவார்கள். நாம் மிளகாய் அதிகமாக உபயோகிக்கின்றோம். மிளகாய்மேலைநாட்டு இனமாகும். எமது காய்கறிகளில் குறிப்பிடப்பட்ட கறிஎன்றசொல் மிளகைத்தான் குறிக்கும். மிளகைத்தான் நாம் உணவு தயாரிப்பில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். சரியான விளக்கமின்மையால் செத்தல் மிளகாயை அதிகளவில் மசாலாப் பொடிகளில் சேர்த்துக் கொள்கின்றோம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சூடான பால், கோப்பி, தேநீர் போன்ற பானங்களை (hot drinks) குடிக்கின்ற போது நாவினால் சிறிது நேரமே ருசித்து விரைவாக அருந்திவிட வேண்டும். ஏனென்றால் நாக்கு தாங்கிக் கொள்கின்ற அளவு சூடான பானம் வயிற்றினுள் செல்லும் போது வயிற்று பகுதியிலுள்ள சுரப்பிகளை முழுமையாகச் சுரந்துஇடக்கஉதவிசெய்கின்றன.

குளிர்ந்த பானங்களை (cool drinks), குளிர்ந்த மோர், பழரசங்கள் போன்ற பானங்களைஅருந்தும்போது அதிக நேரம் நாவினால் சுவைத்து நிதானமாகவே விழுங்க வேண்டும். ஏனென்றால் அதிகமாக குளிர்ந்துள்ள பானங்கள் நிதானமாக சுவைக்கப்படும் போது உமிழ்நீர் கலக்கப் பெற்று மிதமான வெப்ப நிலைக்கு மாறுதலடைந்து இரைப் பையினுள் செல்லும்.

ஆகவே உணவானது உணவாக மட்டுமன்றி ஆரோக்கிய வாழ்விற்குரிய மருந்தாகவும் அமைகின்றது.

## இராசி பலன்

16.08.2017
(ஆடி 31, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி பிற்பகல் 1.50 மணிவரை
ரோகினி பின்னிரவு 12.13 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம் | | சூரி.ராகு.<br>செவ்.புதன் |
| கேது | | | சுக் |
| | சனி | | குரு |

**மேடம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்.

**இடபம்**: தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்**: வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்**: விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**: தொழிலில் இருந்த எதிர்ப்புகள் குறையும், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்**: சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, விட்டுக் கொடுத்துச் செல்வதால் வெற்றி கிடைக்கும் நாள், பிரயாண பயமுண்டு, விரயங்கள் கூடும்.

**விருச்சிகம்**: சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு**: இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், உடல் நலன் சீராகும், தடைகள் உடைபடும் நாள்.

**மகரம்**: பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**: செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**: முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயஉற்சவகாலத்தைமுன் னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கந்தபுராண வாழ்வி யல் தொடர்பான விழிப்பு ணர்வை மேம்படுத்தும் நிக ழ்வுகள் அரங்கேறும். கந்தபு ராண எழுச்சி விழா இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத் தில் இடம்பெறும்.

நல்லை திருஞான சம் பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரம்மஸ்ரீ சி.விஜேந்திரசர்மா ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின் னத்துரை தனபாலா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சிவயோகர் அறநெறிப்பாடசாலை மாண வர்கள் வழங்கும். கலை நிக ழ்வுகள், யாழ்.வேம்படி பெண் கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் வழங்கும் இசை நிகழ்வு என்பன இடம்பெறும். கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவை கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் வழங்குவார். (இ-3)

# தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான த்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும். இதில் வயலின்- சு.கோபிதாஸ், துரவாரகி சுரேஸ் குமார், மிருதங்கம்- வி.ரமணா, கடம்- கே.ரவிசங்கர், கெஞ் சிரா- நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் கலந்துகொண்டு வயலின் சோலோ நிகழ்த்துவர். (இ-3)

# அருள்நெறி விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நடத் தும் யாழ்.மாவட்ட அறநெ றிப் பாடசாலை மாணவர்க ளின் கலை நிகழ்வுகள் அரங் கேறும் அருள்நெறி விழா இன்று புதன்கிழமை பிற்ப கல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண் டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களக ணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக யா/ இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமல ராணி கிருஷ்ணபிள்ளை கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சாவகச் சேரி பிரதேச செயலர் பிரிவி ற்குட்பட்ட வேரற்கேணி கந்த சுவாமி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கர வெட்டி சைவத் தொண்டர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், உடுப்பிட்டி கற்பகப் பிள்ளை யார் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நாடகம் என்பன இடம்பெறும். (இ-3)

# தொடர் இசைப் பேருரையில் இன்று 'அனுமன் தூது'

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீகத் தொடர் இசைப் பேருரை (சங்கீத கதாபிரசங்கம்) இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் இடம் பெறும். இதில் " அனுமன் தூது" எனும் தலைப்பில் நல்லைக் குரு மணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா இசைப்பேருரை நிகழ்த்துவார். (இ-3)

# 'சகிப்புத் தன்மை' ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞானயக்ஞம்) இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணி வரை இல. 700,பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இந்நிகழ்வில் "சகிப்புத்தன்மை" எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>தகைமை/தொழில்:O/L/சாரதி<br>தொ.இ: B/7601 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/7603 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/கடை<br>தொ.இ: B/7602 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/7607 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் லண்டன்.<br>தொ.இ: B/7604 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MSc/பொறியியலாளர்<br>தொ.இ: G/7608 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 19 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்:QSமாலைதீவு<br>தொ.இ: B/7605 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/7610 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# 'பெரியபுராணத்தின் பெருமை' இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னி ட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று புதன் கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும். சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமு கலிங்க சிவாச்சாரியார் தலை மையில் இடம்பெறும். இந் நிகழ்வில் " பெரியபுராணத் தின் பெருமை" எனும் தலை ப்பில் சைவநெறி சர்மார்க்கர் இ.மகேஸ்ராஜ் சொற்பொழி வாற்றுவார். (இ-3)

# ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் மஹோற்சவ காலத்தை முன்னிட்டு கதிர் கலையகத் தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இரவு 7 மணி யளவில் நல்லூர் கந்தசு வாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவால யத்தில் வண்ணை வீரமா காளி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கமலராஜ் குருக்கள் தலைமையில் இடம்பெறும். இவ் ஆன்மீக நிகழ்வுகளில் திருமுருகாற் றுப் படை பற்றிய சொற் பொழிவினை வே.சிவகுரு நாதன் வழங்குவதுடன் கந்த புராணம் தொடர் சொற் பொழி வினை பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந் தன் வழங்குவார். (இ-3)




## கோல முகம் காட்டுமையா!

அடுத்தவரைக் குறைகூறும்
அறிவை நீ குறைத்துவிடு
அயலவரின் மன நிலையில்
அன்பினை நீ விதைத்துவிடு
கொடுப்பவரின் உள்ளத்தில்
குளிர் நிழலாய் இருந்துவிடு
குற்றங்கள் நிதம் புரியும்
கொடியவரை அழித்துவிடு.

-மாவன்னா

## உன் தேரசைந்தால் வினைபகலும்

நல்லைக் குமரனுக்கு கொண்டாட்டம்
நாடிவரும் பக்தர்கள் வண்டாட்டமாம்
வீதி எங்கும் விழாக் கோலம்
அதைக் காணவரும் பக்தர்கள்
விழிநீர் கோலமாம்
உன்னை எண்ண எண்ண
இனிக்குதையா முருகா
சொல்லச் சொல்ல சுவைக்குதையா
உன் தேர் அசைந்தால்
எம் தொடர்வினை அகலும்
மயில் எழுந்துநீ வர
உள்ளம் உருகுதையா

எஸ். கலாமணி
மண்டைதீவு.

## நாடி வந்தோம் அருள் தா

நல்லூரான் தேர்காண
நாடு கடந்தோரும் ஓடி வந்தாரையா
தீவெங்கும் இருந்து திரண்டு வந்தாரையா

ஓடி நடக்க ஒரு இடமும் இல்லை
தேடி தொட்டு தொழுதிட முடியலை
தீர்வொன்றை கேட்டு-நின்
திருவடி தொழுதாரையா.

பாடி ஆடிடும் பாவியர் குறை தீர
நாடி வந்தோம் அருள்வாய் நல்லூரா.

நா.துஷ்யந்
வேரணி.

## காப்பாற்ற வேண்டுமென கையேந்துகின்றோம்

நல்லை நகரிலிருந்து நல்லாட்சி புரியும் முருகா
அழகான தேரினிலே வீதியுலா வருபவனே
வல்லவனாமுமக்கு பலவகை மலர்களுடன்
பாலொடு பழங்களும் நாம் தருவோம்
நல்லருளாய் நிரமக்கு வன்முறைகளற்ற வாழ்வுடன்
நம்நாட்டில் தொடரும் இனவாதக் கொதிப்பால்
சொல்லொணாத் துன்பத்தில் தவிக்கும் தமிழினத்தை
காப்பாற்ற வேண்டுமென கையேந்துகின்றோம்.

சி.காசிப்பிள்ளை
அல்லாரையூர்.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

இல்லை யென்றுனை யிகழு வோர்களும்
எண்ணி டாமலே யிருக்கும் பேர்களும்
வல்வினை தனில் வளரும் மாந்தரும்
வன்மு றைகளிற் சுழலும் வேந்தரும்
கல்மனத் தவர் கயவ ரென்றிவர்
கணக்கை மாற்றியே கதி கலக்குவாய்
நல்லு லாத்தினர் விதி விலக்குவாய்
நற்ற மிழ்ப்பதி நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு தயாராகுங்கள்

## ஸ்டாலின் உத்தரவு



(சென்னை)

உள்ளூராட்சித் தேர்தல் அல்லது சட்டமன்றத் தேர்தல் எந்நேரத்திலும் வரலாம். அதனால் அதற்கு தயாராகுமாறு தி.மு.கட்சியினருக்கு கட்சியின் செயல் தலைவர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், எப்போது வேண்டுமானாலும் தேர்தல் நடைபெறலாம் என்பதனால் தொகுதியிலேயே தங்கி மக்களுடன் தொடர்பை பேணிக்கொள்ளுமாறும் தி.மு.கவின் மாவட்ட செயலாளர்கள்மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவிற்கு பின்னர் அ.தி.மு.க 3 தரப்பாக பிரிந்து மோதிக் கொண்டு வரும் நிலையில், அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாகவே ஸ்டாலின் இத்தகைய உத்தரவை பிறப்பித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (3-8)

# எதற்கும் அஞ்சமாட்டேன் எச்சரிக்கும் தினகரன்

(சென்னை)

முதலமைச்சரின் முறைகேடான செயல்களின் காரணமாகவே நான் அவரை மோசடிக்காரன் எனக் கூறினேன். நான் எவருக்கும்பயந்தவன் அல்ல என டி.டி.வி. தினகரன் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் மதுரையில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், கட்சிக்காக நாம் பேசும் போது அதனை தடுக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், யாரையும் தாக்கும் வகையில் தான் கருத்து தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அம்மா இருக்கும் போது அடங்கி நடந்து கொண்டவர்கள் இன்று தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருகின்றனர் எனக் கூறிய தினகரன், அவர்கள் அனைவரையும் அடக்குவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, இந்த ஆட்சியானது அம்மாவின் பாதையில் செல்லும் வரை எந்த ஆபத்தும் இல்லை. இந்த பாதையை விட்டு விலகிச் சென்றால் அது ஆபத்தாக முடியும்என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எந்த மிரட்டலுக்கும் நான் பயப்படமாட்டேன் எனக்கு அச்சுறுத்தல்களும் இல்லை என மேலும் குறிப்பிட்டுள்ள தினகரன் முன்னாள் நண்பர்களினாலேயே எனக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. அதனை விரைவில் சரி செய்து விடுவேன் எனவும் தெரிவித்துள்ளார். (3-8)

# முழு இந்தியாவையும் உலுக்கிய சம்பவம்

## மனிதவுரிமைகள் ஆணையகத்தின் அதிரடி உத்தரவு

(கோராக்பூர்)

உத்தரப்பிரதேசம் கோராக்பூரில் உள்ள பாபா ராகவ் தாஸ் அரசு வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 72 குழந்தைகள் மரணமடைந்திருந்த சம்பவம் முழு இந்தியாவையும் உலுக்கியது.

அதனைத் தொடர்ந்து, குறித்த சம்பவம் தொடர்பாக 4 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என தேசிய மனிதவுரிமைகள் ஆணையகம் நேற்றைய தினம் உத்தரபிரதேச அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

வைத்தியசாலையில் ஒட்சிசன் பற்றாக்குறை காரணமாகவே குழந்தைகள் மரணித்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

மேலும், குழந்தைகள் இறந்தமை சாதாரண விடயம் அல்ல. இது முற்று முழுதான படுகொலைகள் எனவும் குற்றம் சாட்டியதோடு, மரணங்களுக்கு பொறுப்பேற்று மாநில முதல்வரும், சுகாதார அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்



என காங்கிரஸ் தெரிவித்திருந்தது. இந்நிலையில் சம்பவம் தொடர்பாக வைத்தியர் மிஸ்ரா மற்றும் துணை முதல்வர் கபீல் ஆகியோர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3-8)

# பாதுகாப்பு நடவடிக்கையாக தமிழக விவசாயிகள் கைது



சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டதனை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கையாக டில்லியில் போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும் மற்றும் விவசாயக் கடன்களை ரத்து செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் டில்லியில் கடந்த 70 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று சுதந்திரதினம் கொண்டாடப்பட்டதால் பாதுகாப்பு காரணங்கள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக விவசாயிகள் டில்லி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட விவசாயிகள் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (8)

# பயங்கரவாதிகள் - பிரிவினைவாதிகள் மோதல்

## 25 பேர் பலி



(மணிலா)

பிலிப்பைன்ஸில் உள்ளூரை சேர்ந்த பிரிவினைவாத இயக்கத்தினர் இடையே நிகழ்ந்த மோதலில் 20 பயங்கரவாதிகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் தெற்கு பகுதியில் உள்ள மிண்டானாவ் தீவில் சுமார் 2 1/4 கோடி மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு இராணுவ சட்டம் அமுலில் இருக்கும் சூழலில், இந்த தீவில் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக ஐ.எஸ். இயக்கத்தினரின் ஆதரவு பெற்ற பயங்கரவாத இயக்கம் ஒன்று இத்தீவை வெளிநாட்டு பயங்கரவாதிகளின் சொர்க்காபுரியாக மாற்ற முயன்று வருகிறது.

இந்த பயங்கரவாதிகளுக்கு எதிராக உள்ளூரை சேர்ந்த மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி (மில்ப்) என்ற பிரிவினைவாத இயக்கத்தினர் போரிட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு பிலிப்பைன்ஸ் அரசும் இராணுவமும் ஆதரவு அளித்து வருகின்றன.

இது தொடர்பாக அரசுக்கும் இந்த முன்னணியினருக்கும் இடையே ஒப்பந்தமும் போடப்பட்டு உள்ளது.

இந்நிலையில்மகுயிண்டாணாவ் பகுதியில் உள்ள 2 கிராமங்களில் கடந்த 7ஆம் திகதி பயங்கரவாதிகள் நாட்டு வெடிகுண்டுகளால் தாக்குதல் நடத்தினர். இதில் மில்ப் போராளிகள் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு இராணுவத்தினரின் உதவியுடன் மில்ப் படையினர் பதிலடி கொடுத்ததால் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் வெடித்தது.

கடந்த 6 நாட்களாக நடந்த இச்சண்டையில் 20 பயங்கரவாதிகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (3-8)

# ஐ.நா.அமைதிப்படை தலைமையகம் மீது தீவிரவாத தாக்குதல்; 7 பேர் பலி

(பமாகோ)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமை திப்படை தலைமையகம் மீது தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 7 பேர் உயி ரிழந்துள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா.சபையின் கீழ் செயற்படும் அமைதிப் படை முகாம்கள் உள்ளன. ஆபிரிக்க நாடுகளில் செயற்படும் தீவிரவாத இயக்கங்களை அழிக்கும் பணியில் இப்படை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில்.. அந் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள நகரான டிம்பக்துவில் இருக்கும் அமைதிப்படை தலைமையகத்தில்




நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டுள்ளார்.

இத்தாக்குதலில் 5 மாலி நாட்டைச் சேர்ந்த வீரர்கள் உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அமைதிப்படையை சேர்ந்த வீரர்கள் உள்ளிட்ட 10இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இத்தகவலை உறுதி செய்துள்ள ஐ.நா.சபை, நடத்தப்பட்டது தீவிரவாத தாக்குதல் தான் என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்நாட்டின் மற்றொரு நகரான டோயெ ண்ட்ஸாவில் இருக்கும் இரு அமைதிப் படை வீரர்கள் முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் இரு வீரர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# பங்களாதேஷில் கனமழை

## வெள்ளத்தில் சிக்கி 27 பேர் பலி!

(சிட்டகாங்)

பங்களாதேஷில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 27 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 6 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷ் நாட்டில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள 24க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன. மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 6 இலட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பேரிடர் மேலாண்மை மீட்பு குழுவினர் தெரிவிக்கையில், "நாங்கள் நிலைமையை மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். ஒகஸ்ட் முழுவதும் மழை நீடிக்கும் என்பதால் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

குரிகிராம் பகுதியை சேர்ந்த 60,000 குடும்பத்தினர் மற்றும் நில்பமாரி பகுதியை சேர்ந்த 400 குடும்பத்தினரும் பாதிப்படைந்துள்ளனர். கனமழையால் தண்டவாளங்கள் அரித்து செல்லப்பட்டதால், கடந்த இரண்டு தினங்களாக புகையிரத சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பிரம்மபுத்ராவில் அபாய அளவை தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை மீட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்படுகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, உடை உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சுதந்திரதினம்

## செங்கோட்டையில் மோடி தமிழகத்தில் பழனிச்சாமி



இந்தியாவின் சுதந்திர தின விழா நேற்றைய தினம் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்தது.

இதனை முன்னிட்டு பாரதப் பிரதமர் மோடி டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்த துடன் முப்படைகளின் அணி வகுப்பினையும் பார்வை யிட்டுள்ளார்.

அதன் பின்னர் மோடி உரையாற்றுகையில், நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, விடுதலைக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் போராடியவர்களுக்கு தலை வணங்குகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.


மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் புதிய இந்தியாவை உருவாக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை எனக் கேட்டுக் கொண்ட மோடி ஒற்றுமையால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய சுதந்திர தினத்தினை முன்னிட்டு தமிழகத்தில் சென்னை தலைமையக கோட்டை வளாகத்தில் சிறப்பு ஏற்பாடுகளும் பொலிஸ் அணிவகுப்பும் மற்றும் படையினரின் அணி வகுப்பும் நடைபெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து கோட்டையில் தேசியக் கொடியினை தமிழக முதல்வர் பழனிச்சாமி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தியுள்ளார். பின்னர் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை நினைகூர்ந்ததோடு தனது சுதந்திர தின உரையை நிகழ்த்தியுள்ளார்.

இதன்போது, சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்தவர்களுக்கு வீரவணக்கம்செலுத்துவோம் எனக் குறிப்பிட்ட முதல்வர் தமிழகத்தை அனைத்து துறைகளிலும் முன்னேற்றுவதோடு புதுப்புது திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார். (3-8)

## மேற்கு ஆபிரிக்காவில் கனமழை, நிலச்சரிவு தூக்கத்திலேயே 300 பேர் பலி!



(ப்ரீடவுன்)

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் கன மழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 300இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 179 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது. இதனால், அந்நாட்டின் தலைநகரில் உள்ள மலைப் பகுதியில் பெருமளவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சுமார் 2000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துள்ளதாகவும் 300இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், பலியானவர்களில் 179 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (3-8)

## நேபாளத்தில் சீரற்ற காலநிலை

### பலி எண்ணிக்கை அதிகரிப்பு



நேபாளத்தில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 91ஆக அதிகரித்துள்ளது. நேபாளத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழையால் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவில் சிக்கி இதுவரையில் 38 பேர் காணாமல்போயுள்ள நிலையில், அவர்களைத் தேடும் நடவடிக்கையில் அந்த நாட்டு தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

இங்கு நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 6 மில்லியன் மக்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில், வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டு தற்காலிகக் கூடாரங்களில் தங்கியுள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக சமையல் பாத்திரங்கள் மற்றும்உப்பு, மரக்கறிஎண்ணெய் உட்பட உலர் உணவுப் பொருட்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து மீட்புப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், மீட்புப் பணி நடவடிக்கைக்காக இறப்பர் படகுகள், மோட்டார் படகுகள், 13 ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், 26 ஆயிரத்து 700 பாதுகாப்புப் படையினர் மீட்புப் பணி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகள் அபாய இடங்களாக அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அப்பகுதிகளிலுள்ள ஆறுகள் பெருக்கெடுக்கவும் ஆரம்பித்துள்ளன.

இந்தப் பாரிய அனர்த்தம் காரணமாக இதுவரையில் 2 ஆயிரத்து 847 வீடுகள் சேதமடைந்துள்ளன என உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (3-8)

## சுதந்திர தினமான நாள் அவமானம்

### ஜி.வி.பிரகாஷ் தெரிவிப்பு



2015ஆம் ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 604 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சுதந்திர தினக் கொண்டாடும் இன்றைய நாளின் அவமானம் இது என இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்குமார் தெரிவித்துள்ளார்.

மேலும், இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற நிலையில் தமிழக விவசாயிகள் டில்லியில் போராடுகின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ள அவர் விவசாயிகள் தற்கொலையில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு திட்டம் நடைமுறைக்கு வந்தால் 57,345 விவசாய நிலங்கள் பறிக்கப்படும் எனவும் ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருவதற்கு எதிராக திரைத்துறையினர் மட்டுமன்றி அனைத்துத் துறையினரும் குரல் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள அவர் மக்களுக்கு எதிரான திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் கைவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். (3-8)

## சிரியாவில் வான் தாக்குதல் சுமார் 50 ஆயிரம் பேர் பாதிப்பு

சிரியாவின் தெற்கு எல்லையில் கடந்த சில நாட்களாக வான் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில், அப்பகுதி பாதுகாப்பற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்பகுதியில் சுமார் 50 ஆயிரம் பொது மக்கள் சிக்கியுள்ளதுடன், அவர்கள் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களில் சிறுவர்களும் பெண்களும் அடங்குகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது. மேற்படி பகுதியானது பாதுகாப்பற்றது என்று உணரப்படும் நிலையில், அங்குள்ள மக்களில் சிலர் வெளியேறுவதற்கு முற்படுகின்றனர் என ஐக்கிய நாடுகளின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் உள்ளவர்கள் சுகாதாரம் மற்றும் உணவு உள்ளிட்ட பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (3-8)

## வாழ்த்தினார் ட்ரம்ப் — நன்றி தெரிவித்தார் மோடி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவின் சுதந்திர தினத்தினை முன்னிட்டு, பாரதப் பிரதமர் மோடியை தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு சுதந்திர தினத்திற்காக தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் மோடி, "என்னை தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு, இந்திய சுதந்திர தினத்திற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி ட்ரம்பிற்கு எனது நன்றினை தெரிவித்துக் கொள்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

நாடு முழுவதும் நேற்று, சுதந்திரதினம் விமர்சையாக கொண்டாடப்பட்டு வந்ததோடு, இதனை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமிதாப்பச்சனின் சைகை மொழி தேசிய கீதம்




மாற்றுத் திறனாளிகளும் தேசிய கீதத்தின் மகத்துவத்தினை அறிந்து கொள்வதற்காக சைகை மொழியில் உருவாக்கப்பட்டுள்ள இந்திய தேசிய கீதத்தினை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

குறித்த காணொலியினை மத்திய அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே அண்மையில் வெளியிட்டார். டில்லி செங்கோட்டையின் பின்னணியில் சுமார் 3.35 நிமிடங்கள் வரை இடம்பெற்றுள்ள இந்தக் காணொலியில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுடன் பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் சைகை மொழியில் தேசிய கீதத்தினை வழங்கி வைத்துள்ளார். (3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் 10 மனுக்கள்

**(கொழும்பு)**

**அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைவுக்கு எதிராக , உச்ச நீதிமன்றத்தில் 10 மனுக்களைத் தாக்கல் செய்ய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.**

அனைத்து மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்கான 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு. பவ்ரல் மற்றும் கபே அமைப்புகள் தயாராகி வருகின்றன.

20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு; இரண்டு வாரங்களாகியுள்ள நிலையில், எந்த நேரத்திலும் இதனை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

அனைத்து மாகாண சபைத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தும் வகையிலான இந்த திருத்தச்சட்ட வரைவு அரசியலமைப்புக்கு முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரியவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் 10 மனுக்களை தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றன. (இ-3)

# சுமாத்திரா தீவு அருகே 30 இலங்கையர்கள் மீட்பு



இந்தோனேசியாவில் சுமத்ராவுக்கு அண்மையில் உள்ள நியாஸ் தீவுக்கு அருகே படகில் தத்தளித்த இலங்கை அகதிகள் 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர். முதற்கட்ட விசாரணையில், இவர்கள் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் தஞ் மடைய திட்டமிட்டிருந்தனர் என்று தெரியவந் துளது.

இலங்கையில் தொடர்ந்து வரும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தங்கள் பயணத்தை ஜூலை மாதமே தொடங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் சென்ற படகின் இயந்திரம் பழுதானதால் நியாஸ் தீவுப் பகுதி அருகே தத்தளித்துள்ளது. மீட்கப்பட்ட அனைவரும் குனுங் சிடோலி (Gunung Sitoli) என்ற துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. வட சுமாத்ராவில் உள்ள சிபோல்கா (Sibolga) குடிவரவுத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படக் கூடும் எனக் கூறப்படுகின்றது. (இ-3)

# ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 16 ஆயிரம் பேருக்கு வீட்டுக் கடன்

ஊழியர் சேமலாப நிதியத்தின் தொகை தற்போது ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

தொழில் வழங்குநரைப் போன்று ஊழியர்களும் நிதியத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்று ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆணையாளர் டி.பி.கே.பி.வீரகோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழியர்கள் தமது தரப்பின் பங்களிப்பை உரிய முறையில் நிதியத்திற்கு அனுப்புகின்றனரா? என்பது பற்றி விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஊழியர்கள் தமது நிதியத்திலிருந்து 30 வீதமான தொகையை வீடமைப்பு கடனாக பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் இதுவரை 16 ஆயிரம் பேர் கடன் பெறுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்ட ஆணையாளர் தொழில் வழங்குநர்கள் உரிய காலத்தில் தமது ஊழியர்களின் நிதியத் தொகையை அனுப்பி வைப்பார்களாயின் அநாவசியமாக அபராதம் செலுத்த வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். (இ-3)

# ஆவா குழு உறுப்பினர்களை வேறு சிறைகளுக்கு மாற்ற அனுமதி கோருகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஆவா குழு உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரை, ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு, பொலிஸ் திணைக்களம் நீதிமன்ற அனுமதியைக் கோரியுள்ளது.

யாழ். குடாநாட்டில் பல்வேறு குற்றச் சம்பவங்களிலும் ஈடுபட்டார்கள் என்றும், ஆவா குழு உறுப்பினர்கள் என்றும் கைது செய்யப்பட்ட பலர், யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஒரே சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதால், சூழ்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆபத்து இருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையிலேயே, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆவா குழு சந்தேக நபர்களை, நாட்டின் வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு, பொலிஸார் நீதிமன்றங்களிடம் அனுமதி கோரியுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### அந்தப் பேச்சே எடுக்காதவர்கள்

நாம் ஒரு விபரம் கேட்டிருப்போம்; அல்லது ஓர் உதவி கேட்டிருப்போம்.

“அப்புறமா சொல்றேன்”; “அடுத்த வாரம் சொல்றேன்”, நான் விசாரிச்சுப் பார்க்கிறேன், என்கிற பாணியில் இதற்குப் பதில் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

சரி என நாமும் எழுந்து வந்து விடுவோம். மறுபடி பார்க்கும் போது, அடுத்த வாரம் பார்க்கும் போது அல்லது பிறகு எப்போது பார்த்தாலும் அதைப் பற்றி இந்த ஆசாமிகள் பேச்சே எடுப்பதில்லை. இவர்களைத் தாம் நாம் போய்ப் பார்த்தோமா? இவர்களிடம் தாம் நான் பேசினோமா? இவர்களிடம் தான் நாம் கேட்டோமா? என்றெல்லாம் சந்தேகம் நமக்கே ஏற்படுகிற அளவுக்கு எதுவும் நடக்காதது போலவும் கனவில் வந்த சம்பவம் போலவும் நடந்து கொள்வார்கள்.

அப்புறமாக என்று சொல்வதும் அமைதியாக இருப்பதும் நாகரிகமான மறுப்பின் அடையாளங்களே தவிர, வேறல்ல, இதை உணர்ந்துகொள்ளாமல் “அப்புறமா என்றீர்களே?” ஒரு வாரம் கழித்து என்றீர்களே? என்று இவர்களைக் கஷ்டப்படுத்துவார்கள். கடைசியில், வாங்கிக் கட்டிக் கொள்வார்கள்.

மற்றவர்களை இம்சித்து உதவி பெறுவது என்பது மட்டமான பழக்கம்; கேவலமும் கூட.

சொல்லுகிறேன் என்றவர்கள், அமைதியாக இருந்தால் அதற்காக நாம் விட்டுவிடுவதா? அவர்கள் தங்களது பல வேலைகளின் நடுவே நம் விடயத்தை மறந்திருக்கலாம் அல்லவா? அதற்காக நாமே ஞாபகப்படுத்தாமலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளை இழப்பதா? என்று உங்களில் பலர் கேட்கலாம்.

இது ஒரு நியாயமான கேள்வி, வேலை மிகுதியான உயர்ந்த மனிதர்களையும் ஞாபக மறதிக்காரர்களையும் நாம் மறுபடி அணுகலாம்தான் தவறில்லை. ஆனால் இந்த உரிமையை நாம் எடுத்துக் கொள்ளும் முன் நாம் சில விடயங்களைப் பின்னோக்கிச் சிந்திக்க வேண்டும்.

நம்மை அவர்கள் வரவேற்ற விதம், நாம் உதவி கேட்டதும் அவர்கள் முகம்போனபோக்கு; அதற்குப் பிறகு அவர்களின் சொற்களில் காணப்பட்ட மாற்றம்; பேச்சில் இருந்த தொனி ஆகிய அனைத்தும் நுணுக்கமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவையெல்லாம் உண்மையிலேயே நமக்குத் திருப்தியாகப்பட்டால் இரண்டாவது முறையென்ன, நான்கு ஐந்துமுறை கூட அணுகலாம்.

முடியாது; நடக்காது என்றெல்லாம் சொல்லி நம் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று எண்ணுபவர்களின் பாணிதான் அப்புறம் என்பதும், அந்தப் பேச்சையே மறுபடி எடுக்காததும். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளா மல் அவர்களுக்கு நாம் தர்ம சங்கடத்தை உருவாக்கக் கூடாது.

பூவை அப்படியே முகர்ந்து பார்த்தால் தான் வாசம்.

கசக்கி முகர நினைத்தால் எப்பேர்ப்பட்ட பூவும் நாறத்தான் செய்யும்!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2016 வினாத்தாள் பகுதி-1


♦1 ஆம் 2 ஆம் வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1)



1) 2) 3)

2)



1) 2) 3)

3. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.




1) 2) 3)

4. கீழே தரப்பட்டுள்ள உருக்களின் வளைகோடுகள் மாத்திரம் உள்ள உருவைத் தெரிவு செய்க.




1) 2) 3)

5. கீழே தரப்பட்டுள்ள எண்களுக்கும் அவற்றைச் சுற்றி வரையப்பட்டுள்ள உருக்களுக்கும் ஏற்ப எண் 60 ஐச் சுற்றி வரையப்பட வேண்டிய உரு யாது?




1) 2) 3)

6. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதித்தாளில் உள்ள சுட்டுத்துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.




சுட்டுத்துண்டுக்கு ஏற்ப ①. ② ஆகியனவாக இருக்கத்தக்கனமுறையே யாவை?

1) உற்பத்தி செய்த திகதியும் சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும்
2) சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும்
3) உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

♦ ஒரு சிறிய சந்தையில் உள்ள விற்பனைக் கூடங்களின் மாதிரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| சிறிய சந்தை- 2016 | | | |
|---|---|---|---|
| ① உலர் உணவுப் பொருட்கள் | ② மரக்கறி | ③ பழங்களும் கீரைவகைகளும் | ④ பூக்கன்றுகள் |

7. சீனி, வல்லாரை, வாழைப்பழம் ஆகியவற்றை வாங்குவதற்குச் செல்லவேண்டிய செல்லவேண்டிய விற்பனைக்கூடங்களின் எண்கள் யாவை?

1) ①② 2) ①.③ 3) ②.③

8. தராசு பயன்படுத்தப்படாத கூடமாக இருக்கத்தக்கது யாது?

1) ① 2) ③ 3) ④

9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1) நாம் கடைமைகளை நிறைவேற்றுவோம்.
2) நாம் கடமைகளை நிறைவேற்றுவொம்.
3) நாம் கடமைகளை நிறைவேற்றுவோம்.

10. 'திடசங்கற்பம்' என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.

1) கபடம் 2) கப்பம் 3) சாகசம்


11. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.

காடு, விலங்குகளின் இராஜதானி ஆகும். மனிதர்கள் காட்டு விலங்குகளை ⚠1 விரும்புவர். மனிதர்களுக்கு அவ்வாய்ப்பை வழங்கும் நோக்குடன் காட்டிலிருந்து பிடிக்கப்பட்ட விலங்குகளை கூடுகளில் அடைத்துக் காட்சிப்படுத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் உலகில் ⚠2 பற்றிய எண்ணக்கரு உருவாகியது.

பந்தியில் 1, 2 ஆகிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) பார்ப்பதற்கு, பூங்காவனம்
2) பிடிப்பதற்கு, மிருகக் காட்சிச்சாலை
3) இரசிப்பதற்கு, மிருகக் காட்சிச்சாலை

♦ கீழே தரப்பட்ட உருவைக் கருத்திற்கொண்டு 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.




12. i ஆகிய எழுத்துக்களால் வகைக் குறிக்கப்படத்தக்க இரு விலங்குகள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) முயல் பருந்து 2) யானை, வௌவால் 3) நரி, கொக்கு

13. மேலே உள்ள உருவில் சிங்கம், காகம் ஆகியவற்றை வகைக்குறிப்பதற்கு முறையே பயன்படுத்தத்தக்க எழுத்துச் சோடி இடம்பெறும் விடை யாது?

1) d, f 2) g, m 3) h, g

14. இலங்கைக்குச் சுதந்திரம் எந்த நூற்றாண்டில் எத்தசாப்தத்தில் கிடைத்தது?

1) 19 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்
2) 20 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்தில்
3) 20 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்

15. 2000 .05 .01 ஆந்திகதி இலங்கையில் பிறந்த ஒருவர் 2016 .06.01 ஆந்திகதிவரை சூரியனைச் சுற்றிப் பயணம் செய்துள்ள முழுச்சுற்றுகளின் எண்ணிக்கை யாது?

1) 10 2) 16 3) 17

16. ஒரு பாடசாலையில் ஒரு குறித்த விழாவின் தொடக்கத்தில் 9 மெழுகுவர்த்திகள் கொளுத்துவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு மெழுகு வர்த்தி ஒளிரும் நேரம் 30 நிமிடங்கள் ஆகும். 9 மெழுகுவர்த்திகளை ஒரே தடவையில் கொளுத்தினால் அவை எல்லாம் எவ்வளவு நேரத்திற்கு ஒளிரும்?


1) 30 நிமிடங்கள் 2) 270 நிமிடங்கள் 3) 300 நிமிடங்கள்

17. ஒரு அரசாங்கப் பாடசாலையில் முதலாந்தவணைப் பரீட்சை மார்ச் 18 ஆந் திகதி வியாழக்கிழமை தொடங்கியது. மார்ச் 23 ஆந்திகதி பொதுவிடுமுறைத் தினமாகும். தவணைப் பரீட்சை 6 நாட்கள் நடைபெற்றது. தவணைப் பரீட்சை முடிவடைந்த திகதி யாது?

1) திங்கட்கிழமை 2) வியாழக்கிழமை 3)வெள்ளிக்கிழமை


♦18 ,19 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

18.




1) 2) 3)

19.



1) 2) 3)

20. தேகாரோக்கியத்துடன் இருக்கும் ஒரு யானைக் கூட்டத்தில் உள்ள யானைகளின் தந்தங்களைினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 132 ஆகும். அக்கூட்டத்தில் உள்ள யானைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 22 2) 33 3) 66

♦ கீழே தரப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கையை வாசித்து 21, 22 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.

கண்டி மாவட்டத்தில் உள்ள ஒரே மழைக்காடாகிய மொர எல்லக் காடு ஆனது அனுமதியின்றி மரங்களை வெட்டுதல், பயிர்ச்செய்கைகளுக்காக வெட்டித் துப்பரவாக்கல், சிறிய மின்வலு நிலையங்களை அமைத்தல் போன்ற நிலைமைகளினால் கடும் சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. மகாவலி கங்கை உட்படப் பல ஆறுகளினால் வளம் பெறும் இக்காட்டில் ஏறத்தாழ 192 தாவர இனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அதேவேளை அவற்றில் ஏறத்தாழ 92 இனங்கள் இலங்கைக்கே உரிய தாவரங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றில் 21 தாவர இனங்கள் இப்பொழுது அழியும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளன.

21. மொர எல்லக் காடு இருப்பது இலங்கையில்


1) மத்திய மாகாணத்தில் 2) ஊவா மாகாணத்தில் 3) சப்பிரகமுவா மாகாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2016 வினாத்தாள் பகுதி-1


22. பின்வருவனவற்றுள் இச்செய்தித்தாள் அறிக்கைக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு யாது?
 1) மொர எல்லக் காடு பயிர்ச்செய்கைகளுக்காக வெட்டித் துப்பரவாக்கப்படுகிது.
 2) மொர எல்லக் காடு சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது.
 3) மொர எல்லக் காட்டில் தாவர இனங்கள் காணப்படுகின்றன.

24. A,B,C,D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப்பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத் தக்க மிகச் சிறிய எண் யாது?





 1) 9765
 2) 5679
 3) 2348

24. இங்கு தரப்பட்டுள்ள உருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப உள்ளன. இக்கோலத்திற்கேற்ப ◯ இருக்கும் இடத்தில் இருக்கவேண்டிய எண் யாது?





 1) 24
 2) 12
 3) 6

25. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்கவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




 1) 9 2) 6 3) 4


26. சதுர வடிவம் உள்ள ஒரு தாள் உரு (1) இல் காணப்படுகின்றது. அதன் நடுவில் ஒரு வட்டத் துவாரம் உள்ளது. உரு (2) இற் காணப்படுகின்ற முறிந்த கோடுகள் வழியே தாள் இருதடவைகள் மடிக்கப்படுகின்றது. அதன் பின்னர். உரு (3) இல் உள்ளவாறு இரண்டாவதாக மடிக்கப்பட்ட விளிம்பின் மேலே ஒரு சிறிய பகுதி வெட்டி அகற்றப்படுகின்றது.



உரு (1) உரு (2) உரு (3)


தாளை முற்றாக விரிக்கும்போது காணத்தக்க துவாரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
 1) 2 2) 3 3)5

27. இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கையாது?



 1) 5
 2) 6
 3) 7

28. பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தி ஆக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.





◆ கீழே தரப்பட்டுள்ள அறிவித்தற் பலகையைக்கொண்டு 29. 30 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

> சுதேச மருத்துவ நிலையம்
> சனிக்கிழமை தவிர வாரத்தின் ஒவ்வொரு நாளும்
> மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 வரைக்கும்
> பி.ப. 2.00 தொடக்கம் பி.ப. 5.00 வரைக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

29. மருத்துவர் நோயாளிகளுக்கு ஒரு வாரத்திற்கு சிகிச்சை அளிப்பதற்கு எதிர்பார்க்கும் மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை.
 1) 24 2) 42 3) 49

30. அறிவித்தற்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?
 1) நோயாளிகள் மருத்துவ நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சையைப் பெறலாம்.
 2) மருத்துவர் தொற்று நோய்களுக்கு மாத்திரம் சிகிச்சையளிக்கின்றார்.
 3) மருத்துவர் மருந்துகளுக்காகப் பெரும்பாலும் தாவரப் பொருட்களை பயன்படுத்துகின்றார்.

31. ஒரு சம்பவம் தொடர்பான 5 உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D E

தரப்பட்டுள்ள உருக்களை சம்பவத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தும்போது பின்வருவனவற்றில் எது கிடைக்கும்?
 1) B,C,D,A,E 2) C,B,D,E,A 3) C,B,D,A,E


32. ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 15 பயணி ஆசனங்களும் ஆறு பயணிகள் அமரத்தக்க ஒரு பயணி ஆசனமும் உள்ளன. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் மிகவும் கூடிய எண்ணிக்கை யாது?
 1) 21 2) 36 3) 42

33. 4 பிள்ளைகளுக்கும் 3 வயதுவந்தவர்களுக்கும் பால்த்தேநீர் வழங்குவதற்காக ஒரு லீற்றர் பால் தேவைப்பட்டது. அதற்கேற்ப 20 பிள்ளைகளுக்கும் 15 வயதுவந்தவர்களுக்கும் பால்த்தேநீர் வழங்குவதற்கு எத்தனை லிற்றர் பால்தேவை?
 1) 5 2) 7 3) 15

34. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்படவேண்டும்?
 1) 10 2) 19 3) 20


35. நீளம், அகலம், உயரம் ஆகியன 5 cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1 cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?
 1) 125 2) 25 3) 15

36. ஒரு நாளில் நடைபெற்ற சுற்றாடல் தின நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் (1) (2) (3) (4) என்னும் நிகழ்சிகள் தொடங்கிய நேரங்கள் கீழே உள்ள கடிகாரமுகங்களில் காணப்படுகின்றன.




ஒரு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நிகழ்ச்சி (4) ஆனது நண்பகல் 12.00 இற்கு முடிவடைந்தது. கூடுதலான நேரம் நடைபெற்ற நிகழ்ச்சி யாது?
 1) (1) 2) (2) 3) (3)

37. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகின்றது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார்செய்யும்போது எதர்முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம். இத்தொடர்புக்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.




 1) 22 2) 21 3) 20


38. மூன்று கம்பிச்சட்டங்கள் கீழே காணப்படுகின்றன. முனை P இல் இருக்கும் ஓர் எறும்பு ஒரே பாதையில் இருதடவைகள் செல்லாமல். எல்லாப்பாதைகளிலும் செல்லத்தக்க சட்டம் யாது?





 1) 2) 3)

39. ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் கூட்டுத்தொகைக்கு இருக்கத்தக்க, ஆகவும் கூடிய பெறுமானம்.
 1) 20 2) 60 3) 90

40.



ஆகும். கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு சரியானது?




## 16.08.2017 திகதியில் (இன்று) பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11) | 3 | 21) | 1 | 31) | 2 |
| 2) | 3 | 12) | 1 | 22) | 2 | 32) | 2 |
| 3) | 2 | 13) | 3 | 23) | 2 | 33) | 1 |
| 4) | 1 | 14) | 3 | 24) | 1 | 34) | 3 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 3 | 35) | 1 |
| 6) | 3 | 16) | 1 | 26) | 2 | 36) | 2 |
| 7) | 2 | 17) | 3 | 27) | 2 | 37) | 2 |
| 8) | 3 | 18) | 1 | 28) | 2 | 38) | 2 |
| 9) | 3 | 19) | 2 | 29) | 2 | 39) | 3 |
| 10) | 1 | 20) | 1 | 30) | 3 | 40) | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கிழக்கை மு.கா. கைப்பற்றும்’

## ஹக்கீம் கணிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்பதில் யாரும், எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்று, நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

“ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாண சபையை கைப்பற்றுவதுடன் மட்டுமன்றி, ஓட்டமாவடி கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையை உள்ளூராட்சி தேர்தலில் கைப்பற்றும்” என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத் தொகுதி அமைப்பாளரும் கணக்காளருமான எச்.எம்.எம்.றியாழ் தலைமையில் ஓட்டமாவடி எம்.பி.சி.எஸ். வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற அபிவிருத்தியை நோக்கிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“எங்களுடைய அரசியல் அதிகாரம் என்பது, கடந்த கால ஆட்சிகளிலே பெரும் போடுகாய்களாக எங்களுடைய கட்சியைக் காப்பாற்றுவதற்கு, நாங்கள் போய் ஒரு சரணா கதி அரசியல் செய்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்ட காலங்களில் வருகின்ற போது, கட்சி போராளிகள் தைரியமாக இருக் கின்றார்கள் என்றே வந்தோம்.

கல் குடா, காத்தான்குடியில் தாங்கள் அபிவிருத்தி செய்தோம் எனக் கூறும் அமைச்சர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை காட்டிக் கொடுத்து தான் அரசியல் செய்தார்கள். எனவே அதில் முஸ்லிம் காங்கிரஸ்"க்குப் பங்கு உள்ளதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விரட்ட வேண்டும் என்றுதான் அந்த ஆட்சியாளர்களிடம் இருந்து இவற்றையெல்லாம் கொண்டு வந்தனர். கிழக்கு மாகா ணத்தில் அர. சியல் அந்தஸ் தில் உள்ள அனைவரும் முஸ்லிம் காங்கிரஸின் அறி முகத் தில் வந்தனர்.

காங்கிரஸை ஒரு பிசாசாகக் காட்டி, தங்கள் பிரதேசத்துக்கு அபிவிருத்தியைக் கொண்டு வருவதன் மூலம் கட்சியை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பலவிதமாக இந்த விடயங்களை செய்கின்றனர். .

முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) செய்த வேலைகளை தற்போதைய முதலமைச்சர் நசீர் அஹமட் செய்யவில்லை என்று சொல்லப்பட்ட விவகாரத்தில் ஒன்றை அவர்கள் மறந்து விடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


## விற்பனைக்கு

11 1/2 அடி நீளமுடைய தள்ளு கேற் விற்பனைக்கு மற்றும் கம்யூட்டர் Data, டெலிபோன் வயர்கள் விற்பனைக்கு உண்டு.

139 தொடர்பு : 077 067 3759


## பெயர் மாற்ற அறிவித்தல்

1 ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட எனது பெயர், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ராசையா கலைவாணி என தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களி லும் என் சார்ந்த சகல ஆவணங்களில் கலைவாணி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
ர. கலைவாணி

141


## விற்பனைக்கு

சுன்னாகம் நகர பகுதியில் சிறிய காணித்துண்டு விற்பனைக்கு. 139

தொடர்பு - 077 067 3759


# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

## அமரர். திருமதி கணபதிப்பிள்ளை சிலோஜினி (தேவி)

பிறப்பிடம் : திருகோணமலை, வசிப்பிடம் : தம்பாலை அச்சுவேலி,
தற்காலிக இடம் : தேவாலய வீதி, சங்கானை.



அன்னையாய் மண்ணில் : 27.09.1956

ஆண்டவனாய் விண்ணில் 19.07.2017

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் 16.08.2017 இன்று காலை 7.00 மணிக்கு கீரிமலைத் தீர்த்தக் கரையில் இடம்பெறும். 18.08.2017 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும்.

**ஆபத்தான கட்டத்தில் உதவியவர்களுக்கும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு உதவியவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை வழங்கியோருக்கும் பல்வேறு வகையில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**தேவாலய வீதி, சங்கானை.**

(C-9343)

**தகவல் : சதீஸ்கரன், சுஜிந்தா, ஜெஸ்மிதன், அனோமிதன்.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1164

### சுதாமதி




### கமலன்




### கஜீதன்




### விஜிதா




### கலையரசி




### மேனன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்







## மறுப்பு

பிக்போஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமடைந்தவர் ஜூலி. இவர் மீது ரசிகர்கள் கோபத்தில் இருந்தனர். அதனால் தான் பல மீம்ஸ் போட்டு கலாய்த்து எடுத்தனர்.

இந்நிலையில் ஜூலி 'அது ஒரு நிகழ்ச்சி, எப்படி ஒரு நிகழ்ச்சியில் இருந்ததை வைத்து என்னை எடை போட முடியும்.

மேலும், பிக்போஸில் இருந்த குணம் என்னுடைய நிஜ வாழ்க்கையில் இல்லை' என கூறியுள்ளாராம். ஜூலி சினிமா, சீரியல் என எதிலும் நடிக்கமாட்டார் என அவருடைய பெற்றோர்கள் முன்பே கூறிவிட்டனர்.

## பேய்வீடாகியது பிக்போஸ் வீடு



பிக்போஸ் வீட்டில் பேய் இருக்கிறது என கூறி கவிஞர் சினேகன் இரவு அனைவரும் தூங்கிக்கொண்டிருக்கும் போது அலறினார். மற்றவர்களை ரகசியமாக பயமுறுத்த வேண்டும் என்பதற்காக தான் இப்படி ஒரு ரகசிய டாஸ்க் கொடுக்கப்பட்டது. மற்ற அனைவரும் இணைந்து பிந்து மாதவி, கணேஷ் ஆகியோரை வீட்டில் பேய் இருக்கிறது என நம்பவைத்துவிட்டனர்.

## வெளியேறுவாரா ரைசா




BiggBoss என்பது தமிழில் பிரபலமாக ஒளிபரப்பாகும் ஒரு நிகழ்ச்சி. அடுத்தடுத்து இந்த நிகழ்ச்சியில் என்ன நடக்கப்போகிறது என்பதை தெரிந்து கொள்ள ரசிகர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

ரைசா விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொள்கிறார். மைக் அணியாமல் இருப்பது, பகலில் தூங்குவது போன்ற செயல்களை செய்கிறார்.

இதனால் BiggBoss அவரை கண்டிக்க என்னால் இப்படி இருக்க முடியாது என்னை வீட்டிற்கு அனுப்பிவிடுங்கள் என்று கூறுகிறார்.

## பிக்போஸ் வீட்டில் சிவகார்த்திகேயன்



தமிழகத்தில் மிக பிரபலமாக ஓடிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சி பிக்போஸ். இந்நிகழ்ச்சி மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் வரும் வாரங்களை திரைப்பட ப்ரோமோஷனுக்காக பல பிரபலங்கள் வீட்டுக்குள் நுழைகின்றனர்.

அந்த லிஸ்டில் பிக்போஸ் வீட்டிற்குள் ஒருநாள் மட்டும் சிவகார்த்திகேயன் செல்ல இருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது. அதற்குக் காரணமும் இருக்கிறது. சிவகார்த்திகேயன் மற்றும் நயன்தாரா நடித்திருக்கும் படம், "வேலைக்காரன". இந்தப் படத்தை மோகன் ராஜா இயக்கியிருக்கிறார்.

இந்தப் படத்தின் சேட்டிலைட் ரைட்ஸை விஜய் டி.வி பல கோடிகள் கொடுத்து வாங்கியுள்ளது. சினிமா ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தத்தான், "பிக் போஸ்" வீட்டிற்குள் சிவா செல்லவிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இன்னும் உறுதியான தகவல் வெளிவரவில்லை.

## மன்றாடும் காயு



பிக்போஸ் நிகழ்ச்சியில் காயத்ரி மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

ஆரம்பத்திலிருந்து இவரின் செயற்பாடுகள் எல்லை மீறுகின்றனர், அடிக்கடி கெட்டவார்த்தை பேசி சர்ச்சையில் சிக்குகிறார்.

இந்நிலையில் இவரின் நெருங்கிய தோழரும் ஆறுதலாக இருந்த ஷக்தி வெளியேறினார். காயத்ரி பிக்போஸ்ஸிடம் தன் ஆசை ஒன்றை தெரிவித்தார்.

அதாவது தற்போது தான் இந்த பிக்போஸில் இருக்க வேண்டும், சக்தி ஜூலி மற்றும் ஆர்த்திக்காக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், அதுமட்டுமல்லாமல் Wild Card சுற்றில் ஜூலி , ஆர்த்தி மற்றும் சக்தி வந்தால் எனக்கு சந்தோசமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

## முருங்கை மரத்து பேய்



பிக்போஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள காயத்ரி ரகுராம், மற்றவர்களை வம்பிழுத்து, ஓரம்கட்டி, அவர்கள் வெளியேற காரணமாக இருந்துள்ளார்.

தற்போது காயத்ரியின் நெருங்கிய நண்பரான சக்தி கடந்த வாரம் வெளியேற்றப்பட்டார். அதனால் தன் வலது கை போன சோகத்தில் உள்ள காயத்ரி அடுத்து ரைசாவை டார்கெட் செய்துவருகிறார்.

இந்நிலையில் நடிகை ஸ்ரீபிரியா இது பற்றி ட்விட்டரில் கருத்து தெரிவித்துள்ளார். ஐயோ ஏம்மா இப்படி இருக்கீங்க? ஒரு தடவை தனியா உக்காந்து Mind Voice ஓட்டி பாருங்க,புரியலாம்... இப்படி முருங்க மரத்துல தான் தொங்குவேன்னா எப்படி? என அவர் கேட்டுள்ளார்.

## பிரதமராகும் ஓவியா

ஓவியா❤பக்தன்
@Oviya_haasan

Who will be the next PrimeMinister Of India?
#Julie #OVIYA #BigBossTamil
#BiggBoss

| | |
|---|---|
| Modi | 10% |
| Oviya | 86% |
| Rahul | 4% |

நடிகை ஓவியா என்பதை விட பிக்போஸ் ஓவியா என்றால் உடனே அனைவருக்கும் தெரிந்துவிடும். தன் இயல்பான குணத்தால் ரசிகர்களிடத்தில் மாண்பை பெற்றார். அவர் நிகழ்ச்சி நன்றாக இல்லை என்பது பலரின் கருத்து.


இந்நிகழ்ச்சியின் மூலம் அவருக்கு ஒரு பெரும் கூட்டம் உருவானது. சமூகவலைதளங்களில் ரசிகர்கள் அட்டகாசம் செய்தனர். ஓவியா ஆர்மி, ஓவியா புரட்சி படை என ஒரு புறம் இருக்கும் இங்கே ஒரு கூட்டம் ஓவியா பக்தன் என்ற பெயரில் ஒரு கருத்து கணிப்பை நடத்தியுள்ளது.

இதில் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி கேட்டு, அதற்கு மோடி, ராகுல் காந்தி, ஓவியா என ஆப்ஷன் கொடுத்துள்ளனர். இதில் 86% ஓட்டுக்கள் ஓவியாவிற்கு தான் விழுந்துள்ளது. இது ஓவியாவின் ரசிகர்களை குஷிப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017



தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்ட மேஷ இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் தனாதிபதி சுக்ரன் சகாய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். எனவே தனவரவு தாராளமாக வந்து கொண்டே இருக் கும். உறவினர்களும் நண்பர்களும் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். அரை குறையாக நின்ற பணிகள் இனி அடுக்கடுக்காகத் தொடர்ந்து நடைபெறும்.

இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியம். ஒரு சிலருக்கு நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். செவ்வாய் 3 ஆம் இடத்திற்கு அதிபதியான புதனோடும் ராகுவோடும் இணைந்திருக்கிறார். எனவே சகோதரர்களால் நன்மை கிடைக்கும். வாக்குவாதம் ஏற்பட்டு பிரிந்து சென்ற சகோதரர்கள் இப்பொழுது வந்திணைய வாய்ப்பு உண்டு. அவர்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உங்களுக்கு அழைப்புகளும் வந்து சேரலாம். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். மங்கலப் பொருட்களையும் மனதைக் கவர்ந்த பொருட்களையும் வாங்குவதற்காக ஒரு தொகையை செலவழிப்பீர்கள்.

தங்கு தடைகள் அகல சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. சில நாட்களுக்கு முன்னதாக ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நடைபெற்றிருக்கிறது. சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதாலும் தொழில் ஸ்தானத்தில் கேது உலா வருவதாலும் முறையாக நாக சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்தால் முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்லலாம்.

அதேநேரத்தில் இம்மாதம் குருப் பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது. நிகழும் குருப் பெயர்ச்சி உங்கள் நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்து வைக்கும். தொட்டது துலங்கும். நன்மை செய்யும் குருவையும் அதன் பெயர்ச்சிக் காலத்தில் 'வழிபாடுகளின் வாயிலாக திருப்திப்படுத்துவது நல்லது.

கடகச் சுக்ரனின் சஞ்சாரம்

## எடுக்கும் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும்

ஒகஸ்ட் 22 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்ரன் செல்கிறார். தன சப்தமாதிபதி சுக்ரன், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணப் புழக்கம் நன்றாக இருக்கும். உறவினர்களின் பகை மாறும். வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு கூடும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழியும் பிறக்கும். செப்டெம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்ரன் செல்கிறார். எனவே பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து, அதன் மூலம் உதிரி வருமானங்கள் கிடைக்கும்.

சிம்ம செவ்வாயின் சஞ்சாரம்

ஒகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்திற்கு செவ்வாய் செல்கிறார். இப்பொழுது செவ்வாய் நீச்சத்தில் இருந்து விடுபட்டு கொஞ்சம் பலம்




பெறுகிறது. எனவே உற்சாகத்தோடு செயற்படத் தொடங்குவீர்கள். புதிய பொறுப்புகள் வந்து சேரும். பூமி யோகம் உண்டு. பூர்வீகச் சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் அகலும். அரசு வழிச் சலுகைகள் கிடைக்கலாம்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 2 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், பஞ்சம ஸ்தானத்திற்கு வருகிறார். அப்பொழுது உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

அரசாங்க வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கும். சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!

செப்டெம்பர் 2 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. துலாம் இராசிக்குள் அடியெடுத்து வைக்கும் குருபகவான், உங்கள் இராசியைப் பரிபூரணமாகப் பார்க்கிறார். எனவே எடுக்கும் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். இல்லம் தேடி நல்ல தகவல் நாளும் வந்து சேரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மாதத்தின் முற்பாதியை விட, பிற்பாதி யோகம் தரப்போகிறது. புது முயற்சிகளை குருப்பெயர்ச்சிக்குப் பிறகு வைத்துக்கொள்ளுங்கள். வருமானம் சென்ற மாதத்தைக் காட்டிலும் திருப்தியாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகள் உங்களோடு இணைந்து செயற்பட முன்வருவர். தாயின் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பும் வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. குலதெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் நன்மை தரும். ராகு-கேதுகளுக்கும் குருவிற்கும் பிரீதி செய்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



பேச்சாற்றலால் பிறரை கவரும் ரிஷப இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்ரன் தன ஸ்தானத்தில் இருப்பது யோகம் தான். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வாகன யோகம் உருவாகும். தேங்கிய காரியங்கள் இனி சிறப்பாக நடைபெறும். உங்களுக்குப் பக்கபலமாக இருந்த நண்பர்கள், தொகை கேட்டவுடன் அது கிடைப்பதற்கான வழியை வகுத்துக் கொடுப்பர். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி, ஆடம்பரப் பொருட்களை வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த நகைகளையும் மீட்டு, அணிந்து அழகு பார்ப்பீர்கள்.

சகாய ஸ்தானத்தில் செவ்வாய், புதன், இராகு ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கிறார்கள். எனவே உடன்பிறப்புகளின் வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் உடனுக்குடன் நல்ல முடிவிற்கு வரும்.

கடன்கள் அதிகம் வாங்கி விட்டோமே என்று கவலைப்பட்டவர்கள், தடம் மாறிச் செல்லாமல் இருக்க தக்க விதத்தில் நண்பர்கள் கை கொடுத்து உதவுவர். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிந்தாலும் செப்டெம்பர் முதல் திகதி வரை குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் எதற்கும் கவலைப்படத் தேவை யில்லை. குரு பார்க்கக் கோடி நன்மை அல்லவா? எனவே பார்க்கும் குருவைப் பலப் படுத்த இம் மாதம் குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே யோகபலம் பெற்ற நாளில் குரு பிரீதி செய்து கொள்ளுங்கள்.

சமீபத்தில் பெயர்ச்சியான இராகு-கேதுக்கள் உங்களுக்கு நன்மை தரும் விதத்தில் இருந்தாலும் 9 ஆம் இடத்தில் உலா வரும் கேது, உங்கள் உழைப்பிற்கேற்ற பலனைக் கொடுக்காது. பங்காளி வர்க்கத்தில் பகையை உருவாக்கலாம். மங்கல நிகழ்வுகள் கொஞ்சம் தாமதமாகலாம். எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. அப்பொழுதுதான் ஏற்ற, இறக்கமில்லாத வாழ்க்கை அமையும்.

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்

ஒகஸ்ட் 22 ஆம் திகதி உங்கள் இராசிநாதன் சுக்ரன் கடக இராசிக்குச் செல்கிறார். சகாய ஸ்தானத்திற்கு இராசிநாதன் செல்லும் பொழுது தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தங்கம், வெள்ளி சேர்க்கையும் உண்டு. பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையின் விளைவாக ஏற்பட்ட பகை அகலும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோக முன்னேற்றங்கள் உண்டு. செப்டெம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்குச் செல்லும் சுக்ரனால் ஆரோக்கியத் தொல்லை அகலும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். வாரிசுகளின் படிப்பு சம்பந்தமாகவும் உத்தியோகம் சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகளில்




அனுகூலம் கிடைக்கும்.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஒகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்கு வருகிறார். அதன் விளைவாகத் தாய்வழி ஆதரவு கிடைக்கும். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உருவாகும். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. வீடு, வாகனம் வாங்கும் முயற்சிக்கு நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாட்டிற்கு முயற்சி செய்திருந்தால் அது அனுகூலம் தரும்.

சிம்ம புதன் சஞ்சாரம்

செப்டெம்பர் 2 ஆம் திகதி சிம்மத்திற்குப் புதன் செல்கிறார். தன பஞ்சமாதிபதி சுக்ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்களை அள்ளி வழங்குவார். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்தி வந்து சேரும். சேமிப்பு உயரும். வீடு, இடம் வாங்கிக் குடியேறும் எண்ணம் மேலோங்கும். பாடுபடாமலேயே பலன் கிடைக்கும் நேரமிது.

குருப்பெயர்ச்சிக் காலம்!

செப்டெம்பர் 2 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. துலாம் இராசிக்கு வரும் குருபகவான், உங்கள் இராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போவதால் உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைக்கும். நீண்ட நாட்களாக வராத சம்பளப்பாக்கிகள் வந்து சேரும். வீடு மாற்றங்கள் உறுதியாகலாம். தேக்க நிலை மாறும். தெளிவு பிறக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது. பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அதேநேரத்தில் குடும்பப் பிரச்சினைகளை வெளியில் சொல்வதன் மூலம் விவகாரங்களும் விரோதங்களும் வந்து சேரலாம். கவனம் தேவை. ஆபரண சேர்க்கை உண்டு. பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் தானாக வந்து சேரும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு தாயின் உடல் நலம் சீராகும். ஆவணி சதுர்த்தியில் விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும்.

## பாடுபடாமலேயே பலன் கிடைக்கும் நேரமிது

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சர் விஜயகலாவுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டுமாம்



## முன்னாள் இராணுவத் தளபதி தயா கூறுகிறார்

விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட்டது போன்று இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கும் புனர்வாழ்வு பயிற்சி வழங்கப்பட வேண்டும்என முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். சிறுவர்கள், முதியவர்கள் உள்ளிட்டோரை கொலை செய்து போரில் வெற்றி பெற்றதாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறியிருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே முன்னாள் இராணுவ தளபதி இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கம் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கவில்லை எனவும் நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற எடுக்க வேண்டிய அனைத்தும் எடுத்தது எனவும் விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். விஜயகலா இதற்கு முன்னரும் இப்படியான பொய்களை கூறியுள்ளதாக முன்னாள் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். (இ-3)

# மறைந்தார் மாண்பு

ஒரு கலைஞனானவன் தான் கற்ற கலையை வளர்க்குமுகமாக தேடும் தன்மையும் வளர்க்கும் மனப்பாங்கும் உடையவனாகவும் நல்லொழுக்கம், மனக்கட்டுப்பாடு, ஆன்மீக உணர்வுடன், இறை, குரு பக்தியும் கொண்டவனாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய கலைஞரின் திறனை மனப்பூர்வமாகப் பாராட்டவும், அவர்கள் சிறுவர்களாக இருப்பினும் அவர்களையும் அவர்களது திறனையும் மதிக்கக்கூடியவனாகவும், கலைஞர்களுடன் நல்லுறவைப் பேணவும் கூடியவனாக விளங்க வேண்டும். இவ்வாறான கலைஞனே நாடு போற்ற உலகம் போற்றக் கூடியவனாகவும், தான் மறைந்தும் மறையாத புகழுடையவனாகவும், திகழ்வான். அவ்வாறு சிறப்புற வாழ்ந்து ஆசிரியத்துவத்தில் பல தடங்களைப் பதித்து அண்மையில் மறைந்தவர் வயலின் வித்வான் கலாவித்தகர் கிருஷ்ணசாமி பத்மநாதன் ஆவார்.

கி.பத்மநாதன் 1950 ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 5ஆம் திகதி வண்ணார் பண்ணையில் கிருஷ்ணசாமி, மங்களம்மா தம்பதியரின் புதல்வனாக பிறந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் சிறு வயதிலிருந்தே இசையில் ஆர்வம் உடையவர். வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை, பஜனைகளில் பங்கு கொண்டு வந்துள்ளார்.

1977இல் ஆசிரிய நியமனம் பெற்று நுவரெலியா பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் கடமையேற்ற இவர் தொடர்ந்து ஆசிரிய பயிற்சியை பூர்த்தி செய்து இணுவில் மத்திய கல்லூரி, யாழ்.சன்மார்க்க வித்தியாலயம் என்பவற்றில் கற்பித்து 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இளைப்பாறும் வரை யாழ்.இந்துக் கல்லூரியில் கற்பித்தார்.

> 22.07.2017 அன்று இறைபதமடைந்த வயலின் வித்துவான், இசைக்கலா வித்தகர் கி.பத்மநாதன் அவர்களின் நினைவாக இவ்வாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

நல்லதொரு ஆசானாக விளங்கிய இவர் இந்துக் கல்லூரியில் பல மாணவர்களை இசைப் பாடத்தில் தரம் உயர்த்தியதுடன் தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய நிலையில் பரிசில்கள் பெற வைத்தார். அதுமட்டுமன்றி 'கவின் கலை' மன்றத்தினை ஸ்தாபித்து மாணவர்களூடாகப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவித்தும் 'தீம் தீம்' எனும் இசை இறுவெட்டையும் வெளியிட்டு பாடசாலைக்கும் இசை ஆசிரிய சமூகத்திற்கும் பெருமை சேர்த்தார்.

வயலினில் 'கோபாலகிருஷ்ணபாரதியார் பாடல்கள்', 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்' 'தியாகராஜா சுவாமிகள் கீர்த்தனைகள்' என்பவற்றை அவர்களது வரலாற்று விளக்கத்துடன் வித்தியா சமான முறையில் நடத்தி வந்துள்ளார். பல்வேறுபட்ட பல்லிய நிகழ்வுகள், 'வயலினில் பண்ணிசை, 'வயலினில் திருப்புகழ் அமுதம்'. எனப் பல்வேறு நிகழ்ச்சிகளையும் தனது மைந்தன் சியாம் கிருஷ்ணா புதல்வி.செல்வி. ப.காயத்ரி ஆகியோருடனும் ஏனைய புதல்விகளினதும் மாணவர்களினதும் அனுசரணையுடனும் இணைந்து நடத்தி பெருமை கண்டவர்.



வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சையை மட்டும் மையப்புடுத்திக் கற்று தன்னை வளர்த்த கலைஞன் இந்தியாவில் சென்று கற்காத போதும் நீண்ட தேடலுடனும் இந்திய இசைக் கலைஞரின் வாசிப்பை உற்று நோக்கித் தன்னை வளர்த்துக் கொண்ட பெருமை மிக்க யாழ்ப்பாணத்துக் கலைஞன்.

இவ்வாறு சிறப்பு மிக்கவரும் நல்லதொரு கலைஞனும் பண்பாளனனும், நல்லாசானுமாகிய கி.பத்மநாதனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது இழப்பால் துயருறும் குடும்பத்திற்கு இறைவன் அருள்புரிவாராக. அவரது புகழ் என்றும் நீடித்து ஓங்குக.

**உ.குமுதா**
**நல்லூர்.**

# படைத்தளபதிகள் சந்திப்பு



(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர குணரத்தினவை சந்தித்தார்.

இராணுவத் தளபதியாக தமது கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் கடற்படைத் தலைமையகத்திற்கு முதற் தடவையாக இவர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தலைமையகத்திற்கு வருகை தந்த இராணுவத் தளபதியை, கடற்படைத் தளபதி மற்றும் கடற்படையினர் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்றன[illegible]

பின்னர் இராணுவத் தளபதி மற்றும் கடற் படைத் தளபதி இருவருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தமது சேவைகள் பற்றி கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வினை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறப்பட்டன. (இ-3)

# விஜயதாஸவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு, பௌத்த உயர்பீட மகாநாயக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்பதோடு, கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படுவதாக குறிப்பிட்டு, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவரும் முனைப்பில் ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே, இதற்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், நாளை சிறிகொத்தாவில் கூடவுள்ள ஐ.தே.கவின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணசாமி வீராசாமி (K.V.Samy)

(Mr. Kv samy, Photographer,Manager, ex. Fisheries Union , Saudi Catering , Former UNDP Project officer)



மலேசியாவை பிறப்பிடமாகவும், யாழ். தொண்டைமானாறு , அவுஸ்திரேலியாவை (Brisbane) வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கிருஷ்ணசாமி வீராசாமி ( K.V. Samy) அவர்கள் 14.08.2017 திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. கிருஷ்ணசாமி- வள்ளித்தங்கம் அவர்களின் அன்பு மகனும்,காலஞ்சென்ற திரு. திருமதி. துரைராசா- இரத்தினாம்பாள் அவர்களின் அன்பு மருமகனும் சுகிர்தவதி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி -ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் ஆனந்தி, விஜித்தனின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, கே.சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரகுபதி, உஷாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் யாதவ், வேனுஷா, வேனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.08.2017 இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் Australia Great Northern Garden of Remembrance, Tallowwood Drive, Deception Bay இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சண்முகபாலன் (மைத்துனர்) +61 429 168 358
ஆனந்தி ரகுபதி (மகள்) 61 433 200 971
விஜித்தன் (மகன்) 61 434 413 103

தகவல் :- குடும்பத்தினர்
No : 9 BARRHEAD STREET,
WAVELL HEIGHTS BRISBANE,
QLD 4012, AUSTRALIA.
நடுத்தெரு தொண்டைமானாறு.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 60 | 120 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 200 | 300 | 240 | 300 | 300 |
| தக்காளி | 160 | 120 | 140 | 140 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 70 | 80 | 80 |
| கோவா | 120 | 80 | 120 | 100 | 120 | 120 |
| கரட் | 140 | 150 | 140 | 180 | 160 | 150 |
| பூசணி | 40 | 40 | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 60 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 150 | 140 | 200 | 170 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 140 | 120 | 140 | 140 |
| பாகற்காய் | 180 | 150 | 140 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 80 | 50 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 120 | 100 | 140 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 35 | 60 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 40 | 20 | 40 | 50 | 60 | 80 |
| போஞ்சி | 180 | 150 | 160 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்பு[illegible] | 80 | 60 | 60 | 100 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 40 | 40 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 100 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | — | 200 | 300 | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 160 | 150 | 200 | 260 |
| முள்ளங்கி | 80 | 30 | 60 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 25 | 30 | 40 | 25 |
| [illegible] | 15 | 20 | 30 | 20 | 20 | 15 |
| [illegible] | 60 | — | 50 | 100 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தினால் சமாதானத்தைப் பெற இயலும். பலம் என்பது ஒற்றுமையினால் கிடைக்கக்கூடியது.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்திய சுதந்திர தினத்தில் கண்ணீர் விட்ட அந்தக் கணம்

இந்திய தேசத்தின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

70 ஆண்டு கால சுதந்திரத்தில் இந்தியா சாதித்தவை என்பவற்றுக்கு அப்பால், ஒன்று பட்ட பாரத பூமியாக இந்தியா இன்றும் கட்டுக் கோப்புடன் திகழ்வது அற்புதமானது.

இந்திய சுதந்திர தின நிகழ்வுக் கொண்டாட் டங்கள் இந்தியத் தூதுவராலயங்கள் இருக் கக் கூடிய நாடுகளிலும் நடந்துள்ளன.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இருக் கக்கூடிய இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் காலை, மாலை என சுதந்திர தின நிகழ்வுகள் நடந்தன.

இதில் மாலை மஞ்சுநாத் சகோதரர்களின் வயலின் இசையோடு சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பேராசிரியர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தலைமையுரையாற்றிய இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன்; இந்தியாவின் முன் னேற்றம், உணவு உற்பத்தியில் கண்டுள்ள தன்னிறைவு, விண்வெளி ஆராய்ச்சி எனப் பல விடயங்களை எடுத்துரைத்த பின் நான் ஒரு இந்தியன் என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன் என்றார்.

இந்தியாவின் சனத்தொகைப் பெருக்கம் உங்கள் நாட்டுக்கு பாதகமாக இல்லையா? என்று சிலர் கேட்கின்றனர்.

ஆனால் எங்கள் சனத்தொகைப் பெருக் கத்தை எங்கள் பலமாகவும் செல்வமாகவுமே இந்திய தேசம் பார்க்கிறது என்றார்.

இறுதியாக இந்தியாவின் ஒற்றுமையின் பலம்பற்றிக் கூறிய அவர், ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் இந்திய நலனில் ஒன்றுபடும் பண்பாடு பற்றிக் கூறிய போது, நம் இதயம் அடைத்துக் கொண்டது.

அந்த நிகழ்ச்சி நடந்த அந்த மண்டபத்தைப் பார்த்தேன். வட்ட மேசையைச் சுற்றிவர இருந்த கதிரைகளில் ஒவ்வொரு பிரிவாக நம்மவர்கள் இருந்தனர்.

முதலமைச்சருக்கு அருகில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இருந்தராயினும் இருவரும் அளவளாவிக் கதைத்ததைக் காண முடியவில்லை.

ஆக, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் பகையுணர்வு கொண்டவர் களாக இருந்ததைக் காண முடிந்தது.

இதைப்பார்த்தபோது உண்மையிலேயே இதயம் கனத்துக் கொண்டது.

ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்தி உலகம் முழுவதையும் எங்கள் பக்கம் திருப்பிய ஈழத் தமிழினத்தின் இன்றைய நிலைமை இதுதானா?

எத்தனை தியாகங்கள், எத்தனை உயிரிழப் புக்கள், எத்தனை அழிவுகள் இவற்றின் பிற் பாடு இப்படியொரு அரசியல் சூழ்நிலைதான் எங்களுக்குக் கிடைத்ததா? என்று நினைத்த போது, கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

இருந்தும் அங்கு நடந்த மஞ்சுநாத் சகோ தரர்களின் இசை மழையில் நனைந்ததால் கன்னத்தின் ஓரமாய் உப்பு நீர் ஓடியதை மற்ற வர்கள் கண்டுகொள்ளாமல் இருந்திருக்கலாம்.

இறைவா! எங்களிடமும் ஒற்றுமை ஏற் படுமா? அல்லது எல்லாத் தியாகங்களையும் மறந்து எங்கள் சொந்த நலனோடு எங்கள் சீவியம் முடியுமா?

## துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் பலி! இரு பொலிஸாரின் மறியல் நீடிப்பு

பொலிஸாரின் துப்பாக் கச் சூட்டில் இளைஞர் ஒருவா உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலிஸ் சந்தேக நபர்களையும் எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்கு மாறு பருத்தித்துறை நீத வான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகன் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி குடத்தனை 6 ஆம் கட்டைச் சந்திப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத் தில் சட்டவிரோத மணல் ஏற்றிவந்த ஹன்டர் வாகனத் தில் இருந்த இளைஞர் ஒரு வர் பலியானார்.

இது தொடர்பில் அன்று கடமைக்குச் சென்ற பருத் தித்துறை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சி.சஞ்சவன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரான முகமட் முபாரக் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் தொடர்ந்து வைக் கப்பட்டிருந்தனர்.

நேற்று மீண்டும் நீதிம ன்றல் முற்படுத்தப்பட்ட போது அவர்களை மீளவும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டார். (இ-60)

## குழை போட்டு மீன்பிடித்த ஒன்பது மீனவர்கள் கைது

(கரணவாய்)

வடமராட்சி கடற்பரப்பில் சட்டவிரோதமான முறை யில் குழை போட்டு மீன்பிடி யில் ஈடுபட்டிருந்த நான்கு படகுகளை கடற்படையினர் மீட்டதுடன் அதில் இருந்த ஒன்பது உள்ளூர் மீனவர்க ளையும் கைது செய்துள்ள னர்.

கடற்படையினர் வடமரா ட்சி கடற்பரப்பில் சட்டவி ரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவோரை கைது செய்வத ற்காக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது குழை கள் போட்டு மீன்பிடிப்பத ற்காக குழைகளுடன் பய ணித்த நான்கு படகுகளை கைப்பற்றியதுடன் அதில் இருந்த ஒன்பது மீனவர்க ளையும் கைது செய்திருந்த னர்.

இவர்கள் நேற்று அதி காலை 2 மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே கைது செய் யப்பட்டனர். (இ-60)

## திருவிழா

ஏழாலை சிவபூதவராயர் ஆலய அலங்காரத் திரு விழா நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகி எதிர்வ ரும் 26 ஆம் திகதி வரை திருவிழா இடம்பெறவுள் ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகம், பூஜைகள் இடம் பெற்று அன்னதானமும் வழங்கப்படும். (இ-3)

## பக்தி ரச கீதங்கள்

எழுவைதீவு முத்தன் காடு முருகமூர்த்தி ஆலய மஹோற்சவத்தில் எதிர்வ ரும் 19 ஆம் திகதி சப்பை ரத திருவிழா பிற்பகல் 3 மணி யளவில் நடைபெறவுள் ளது.

மறுநாள் முற்பகல் 11 மணியளவில் தேர்த் திரு விழா நடைபெறும். இந்நாட் களில் மாலை 4 மணியள வில் கலாபூஷணம் க.லோகே ஸ்வரனின் பக்தி ரச கீதங் கள் பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ-3)

## வறட்சியினால் கடும் பாதிப்பு

வறட்சி காரணமாக 19 மாவட்டங்களில் சுமார் 12 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

137 பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் வறட்சியினால் பாதிக்கப் பட்டுள்ளதாக அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் ஐந்து இலட்சம் பேர் வட மாகாணத்தில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள னர. இதில் யாழ் மாவட்டத்தில 15 பிரதேச செயலாளர் பிரிவு களில்35 ஆயிரத்து 476 குடும பங்களைச் சேர்ந்த ஓர் இலட் சத்து 28 ஆயிரத்து 652 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கிழக்கு மாகாணத தில் சுமார் இரண்டு இலட் சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளது டன் அம்பாறை மாவடடத்தில் 11 பிரதேச செயலாளர் பிரிவு களில 16 ஆயிரத்து 300 குடும பங்களை சேர்ந்த 57 ஆயிர த்து 248 பேரும், திருகோண மலை மாவட்டத்தில் 11 பிர தேச செயலாளர் பிரிவுகளில் 10 ஆயிரத்து 771 குடும்பங் களை சேர்ந்த 35 ஆயிரத்து 951 குடுமபங்களும பாதிக்கப் பட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டம் தயாரித்தல் போட்டிக்கு பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடை முறைப்படுத்தப்படும் கலா சார செயற்றிட்டத்தின் கீழ் ஆவணி மாத வேலைத் திட்டத்தில் "தற்போது எமது விடுமுறைக் காலம்" என்ற தொனிப்பொருளில் குடும்ப சூழலில் கலை ரசனையை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றோர், பிள்ளைகளி டையே ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் குழந் தைகளின் சுதந்திரம் மற் றும் குடும்ப உள்ளகத் தொட ர்புகளை விருத்தி செய்வதற் குமான வேலைத்திட்டத் தின் கீழ் உடுவில் பிரதேச கலாசார அதிகாரசபையால் பிரதேசத்தின் சிறுவர் கழ கங்களைச் சேர்ந்த சிறார் களிடையே பட்டம் தயாரித் தல் போட்டி நடத்தப்பட வுள்ளது.

எனவே உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறு வர் கழக சிறார்கள் இப் போட்டியில் பங்குபற்றிப் பயன்பெறலாம்.

போட்டியானது கீழ்ப் பிரிவு (வயது 5-10 வரை), மேற்பிரிவு (வயது-11-15 வரை) என இருபிரிவுகளில் நடைபெறும்.

எனவே ஆர்வமுடைய சிறார்கள் தங்களின் பெயர், விபரங்களை உடுவில் பிர தேச கலாசார அதிகார சபை ஒருங்கிணைப்பாளரிடம் எதிர்வரும் 23 ஆம் திக திக்கு முன்பாக பதிவு செய்யு மாறு கேட்டுக் கொள்கிறேன் என பிரதேச செயலாளர் திருமதி.மதுமதி வசந்த குமார் அறிவித்துள்ளார். (இ)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**2,12 ஆவதாக வரும் ஆண் இராசியை ஏற்கலாமா?**

பெண் இராசிகள் என்றழைக் கப்படுபவை மீனம், ரிஷபம், கட கம், கன்னி, விருச்சிகம், மகரம். இதே இராசியில் பெண் பிறந்திருந்து இதற்கு 2 அல்லது 12 ஆவது இராசி யாக ஆண் இராசி வந்தால் தோஷ மில்லை.

**மத்திம நிலை**

ஆண், பெண் இராசியதிபதிகள் ஒருவருக்கு நட்பு, மற்றவருக்கு பகை.

**அதம நிலை**

ஆண், பெண் இராசியதிபதிகள் ஒருவருக்கு சமம், மற்றவருக்குப் பகை.

(தொடரும்)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

82

அந்தக் கவலை அவர்களை அரித்தது. வணங்காத தெயவங்கள் இல்லை. அளிக்காத தானங்கள் இல்லை. ஆனா லும் அரசியின் கருவறை கண் திறக்கவேயில்லை. வருங் காலத்தில் என்ன நடக்கவிருக்கிறது என எவ ருக்குத்தான் தெரியும்? வாரிசு அற்றதால் வருத்தம் நிறைந் திருந்த அவர் களது வாழ்க்கையில் வந்து சேர்ந்தது ஒரு வானளாவிய திருப்பம்!ஆறாத்துயருடன் இருந்த அரசன் ஆகாசராஜன். குல குருவான சுகமா முனிவரை அணுகினான். குழந் தைப் பேறின்றி தானும் தன் தாரமும் தவிக்கும் தவிப்பைச் சொன்னான். சுகமா முனிவர் கண்களைச் சற்றே மூடி ஞானதிருஷ்டியில் நடக்க இருப்பதைத் தெரிந்து கொண்டார். பின்னர் கண்களைத் திறந்து ஆகாசராஜனை அன்புடன் நோக்கினார். (தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தூய அன்பு வேண்டும்



✦ பிறரிடம் பலன் எதிர்பார்த்து அன்பு செலுத்துவது கூடாது. கைமாறு கருதாத அன்பே தூய்மை மிக்கது.

✦ ஆணவம் நிழல் போல மனிதனை விடாமல் பற்றி இருக் கிறது. அதை அகற்றுவது எளிதானது அல்ல.

✦ அவித்த நெல் மீண்டும் முளைப்ப தில்லை. அதுபோல, ஆசையற்ற ஞானிகள் மண்ணில் மீண்டும் பிறப்பதில்லை.

✦ இரு கண்களும் கண்ணாடியைப் போல, மனதில் இருப்பதை அப்படியே மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி விடும்.

## ஆரோக்கியமான சூழல் ஆரோக்கியத்தை இரட்டிப்பாக்கும்!

கழிவுகளை தரம் பிரித்து அகற்றுவோம்.

உக்கக்கூடிய கழிவுகளை, சேதனப் பசளை தயாரித்திட வழங்கிடுவோம்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை மீள் சுழற்சிக்கு தந்திடுவோம்.

இலத்திரனியல் கழிவுகளை அவதானத்துடன் அகற்றிடு வோம்.

**Refuse, Reduce, Reuse, Recycle**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொனால்டோவுக்கு தடை

ரியல் மட்ரிட் சுப்பர் ஸ்ரார் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 5 போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

லா லிகா தொடரில் சாம்பியன் ஆன ரியல் மட்ரிட், கோபா டெல் ரே தொடரில் கிண்ணம் வென்ற பார்சிலோனா அணிகள் 'சுப்பர் கிண்ண' போட்டியில் நேற்று முன்தினம் மோதின.

இரு போட்டிகளை கொண்ட இதன் முதல் போட்டி, பார்சிலோனாவில் நடந்தது. போட்டியின் 50 வது நிமிடத்தில் பார்சிலோனாவின் ஜெரார்ட் பிக்கே, 'சேம் சைட்' கோல் அடிக்க, ரியல் மட்ரிட் 1:0 என, முன்னிலை பெற்றது.

பின், 77வது நிமிடத்தில் பார்சிலோனாவின் மெஸ்சி, ஒரு கோல் அடித்து சமன் செய்தார். அடுத்த 3வது நிமிடம் ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ (80வது) ஒரு கோல் அடித்தார். இந்த உற்சாகத்தை தனது 'ரீ-ஷேர்ட்டை' கழற்றி கொண்டாடியதால், நடுவர் ரிக்கார்டோ டி பர்காஸ் (ஸ்பெயின்) ரொனால்டோவுக்கு மஞ்சள் அட்டை காண்பித்தார்.

**ரொனால்டோ கோபம்**

அடுத்த இரண்டாவது நிமிடம் பார்சிலோனா கோல் பகுதிக்குள் சென்ற ரொனால்டோ, 'பெனால்டி' பெறும் வகையில் கீழே விழுந்ததாக நடுவர் ரிக்கார்டோ, மீண்டும் மஞ்சள் அட்டை காண்பித்தார். ஒரே போட்டியில் இருமுறை மஞ்சள் அட்டை பெற்றதால், உடனடியாக 'ரெட் கார்டு' கொடுத்தார் நடுவர் ரிக்கார்டோ. இந்த கோபத்தில் நடுவரின் முதுகில் வலது கையை வைத்து தள்ளி விட்டார் ரொனால்டோ. இருப்பினும், இப்போட்டியில் ரியல் மாட்ரிட் அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

**5 போட்டியில் தடை**

இதையடுத்து, 'ரெட் கார்ட்' பெற்றதற்கு 1 போட்டி, நடுவரை தள்ளிவிட்டதற்கு 4 என, மொத்தம் 5 போட்டிகளில் பங்கேற்க ரொனால்டோவுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதனால், பார்சிலோனாவுக்கு எதிரான சுப்பர் கிண்ண, இரண்டாவது போட்டியில் இவரால் பங்கேற்க முடியாது. இவருக்கு ரூ. 2.87 லட்சம் மற்றும் ரியல் மட்ரிட் அணிக்கு ரூ. 1.32 லட்சமும் அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்த 10 நாட்களில் இந்த தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யலாம்.



## இலங்கை அணி அறிவிப்பு

இந்தியாவிற்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 3-0 எனக் கைப்பற்றியது. இந்நிலையில் வருகிற சனிக்கிழமை (19ஆம்திகதி) இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாக இருக்கிறது.

இதற்கான இந்திய அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 15 பேர் கொண்ட இலங்கை அணி நேற்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விபரம்:-

உபுல் தரங்க (அணித் தலைவர்), மத்யூஸ், டிக்வெல்லா, குணதிலகா, குசல் மெண்டிஸ், கபுகேதர, சிறிவர்தன, புஷ்ப குமாரா, அகிலா தனஞ்சய, சண்டகன், திசாரா பெரேரா, ஹசரங்கா,லசித் மலிங்கா, துஷ்மந்த சமீரா, விஷ்வா பெர்னாண்டே.

இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் தொடர் குறித்து இலங்கை அணித் தலைவர் தரங்க கூறுகையில் "எல்லா அணிக்கும் ஒரு சோதனை வரும். இலங்கை ரசிகர்கள் வீரர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

## தமிழர் போராட்ட...

இந்தியாவின் 70ஆவது சுதந்திர தினத்தை ஒட்டிய யாழ் நிகழ்வுகள் யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

இதில் அதிதியாகப் பங்கேற்றிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது உரையை ஆற்றுகையில்,

குரு ப்ரம்மா...

வட இலங்கையின் மாண்புமிகு இந்திய நாட்டு துணைத்தூதுவர் திரு.நடராஜன் அவர்களே! திருமதி சாந்தி நடராஜன் அவர்களே! இங்கு வருகை தந்திருக்கும் கௌரவ அதிதிகளே! சிறப்பு அதிதிகளே! எனதருமைச் சகோதர சகோதரிகளே!

பாரதநாடு சுதந்திரம் பெற்று தனது 70வது சுதந்திர தின நிகழ்வுகளை இந்தியாவின் பல பாகங்களிலும் வெகுவிமர்சையாக இன்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

இவ் வேளையில் எமது இந்திய துணைத்தூதுவர் திரு.நடராஜன் அவர்கள் வடமாகாணத்தில் தமது பங்கிற்கு சுதந்திர தின நிகழ்வுகளை இன்று (நேற்று) யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் முன்னெடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இந்திய மக்களையும் குறிப்பாக தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

விஜயநகரப் பேரரசு காலத்தில் கடல் வழியாக இந்தியாவிற்கு முதன்முதல் வருகை தந்த வஸ்கோடகாமா என்ற போர்த்துக்கீசர் இந்தியாவுக்கான கடல்வழிப் பாதையைக் கண்டுபிடித்தார்.

அக்கால இந்தியாவின் மன்னர்கள் ஆட்சியின் கீழ் காணப்பட்ட செல்வச் செழிப்பையும் குறிப்பாக வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், மணிவகைகள், வாசனைத்திரவியங்கள் போன்றவற்றையும் கண்ணுற்ற மேலை நாட்டவர்கள் இந்தியாவை ஆச்சரியமாகப் பார்த்தனர். அப்பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யும் வணிக நோக்குடன் 1498ல் வந்திறங்கினார்கள். போர்த்துக்கீசர்கள் காலத்தில் அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் வரத் தொடங்கினர்.

ஆட்சியையும் பல இடங்களையும் அவர்கள் கைப்பற்றினர். 1947ஆம் ஆண்டு வரை தமது ஆட்சி அதிகாரத்தை இந்தியாவில் அவர்கள் நீடித்தனர்.

அந்த அந்நியரின் ஆட்சிக்கெதிராக தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் அகிம்சை வழியிலான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தார்.

சூரியனே அஸ்தமனமடையாத சாம்ராஜ்ஜியத்தைக் கொண்ட ஆங்கிலேயர்களின் ஆட்சி 1947 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

அந்த நாளே இந்தியாவின் உதய நாளாக அதாவது சுதந்திரம் பெற்ற தினமாக நினைவுகூரப்படுகின்றது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டமானது இந்தப் பகுதியில் உள்ள மற்றைய நாடுகளுக்கும் சுதந்திரம் கிடைக்க வழிசமைத்தது.

இந்தியாவின் சுதந்திரத்தை தொடர்ந்து 1948இல் இலங்கை சுதந்திரமடைந்தது. ஆனால் ஒரு சில வருடங்களுக்கு உள்ளேயே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு, முரண்பாடுகள், மோதல்கள் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

பெரும்பான்மையினர் என்ற உரித்தை ஆங்கிலேயர் காலத்தில் பெற்றவர்கள் தமது ஆட்சி உரித்துக்கு மற்றைய இனத்தவர் அனைவரும் அடிபணிய வேண்டும் என்ற அவர்களின் எண்ணமே இம்முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளது.

காலத்துக்கு காலம் அம்மோதல்கள் தணிந்திருக்கின்ற நிலை வந்த போதும் அதன் பாதிப்புக்களை முழுமையாக உணர்பவர்கள் அல்லது அனுபவிப்பவர்கள் தமிழ் மக்களாகவே இருந்து வருகின்றனர்.

இந்திய நாட்டின் தலையீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்கான கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட போதும் சிங்கள மக்களை சமாதானம் செய்யும் நோக்கில் மாகாண சபை அரசியல் அமைப்பு முறையானது அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இதனால் எமக்கெனத் தரப்பட வேண்டிய உரிமைகள், உரித்துக்கள் மறைக்கப்பட்டு விட்டன. இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் தம்மைத் தாமே ஆளக்கூடிய அதிகாரங்களுடன் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியவற்றைப் பகிர்ந்து தருமாறு அழுத்தங்கள் பிரயோகித்த போதும் ஆளுநர் என்ற ஒரு அலுவலரை தலைமை அலுவலராக நியமித்து சகல நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தக் கூடிய மேலதிக அதிகாரங்களை அவருக்கு வழங்கி அவரின் நெறிப்படுத்தலின் கீழ் எம்மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வாழ வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் போரின் முடிவுக்குப் பின்னர் ஒரு தமிழ் மகனை வட மாகாண ஆளுநராக்க வேண்டும் என்று பல நிறுவனங்களாலும் அமைப்புக்களாலும் கோரிக்கை விடப்பட்டது.

அதனை அவ் ஆட்சியாளர்கள் நிராகரித்தார்கள். தெற்கத்தேய மாகாணங்களுக்கு ஒரு தமிழரை நியமிக்கலாம் ஆனால் வட மாகாணத்துக்கு நியமிக்க கூடாது என்ற கெட்டியான தீர்மானம் ஒன்று அவர்களால் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானமே இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்த போது பல்வேறு சிற்றரசுகளாகச் சிதறிக்கிடந்த இந்தியா சுதந்திரத்தின் பின் இரும்பு மனிதர் வல்லவாய்பட்டேலின் ஆளுமையின் காரணமாக பாரத நாடாக ஒன்றிணைக்கப்பட்டது.

பல்வேறு மொழிகளையும் கலாசாரங்களையும் கொண்ட வேறுபட்ட சமூகங்கள் இந்தியர் என்ற ஒரு பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்தார்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் நோக்கில் மொழி வழி மாநிலங்களை அமைத்து பலமான கூட்டு அரசாங்கத்தினை அமுல்படுத்தினார்கள்.

டாக்டர் அம்பேத்கரின் தலைமையில் புதிய குடியரசு அரசியல் அமைப்பை வரைந்து சமூக பொருளாதார அரசியல் சமத்துவத்துக்கு வித்திடப்பட்டது.

பாரதநாடு என்ற வறுமையான தேசத்தை பசுமைப் புரட்சி மூலம் உணவில் தன்னிறைவு காண வைத்தார்கள் எம் இந்திய சகோதர சகோதரிகள். கல்வியில் வளர்ச்சி, வளர்ந்த நாடுகளுடன் போட்டியிடக்கூடிய வகையில் விண்வெளி ஆராய்ச்சிகள், வல்லரசுகளுக்கு சவாலாக அணு ஆராய்ச்சி, ஏவுகணைப் பரிசோதனைகள் என்று பிரமிக்கத்தக்க வளர்ச்சியை இந்தியா கண்டு வருகின்றது. பெரும்பான்மையினரின் மொழிமூல, மதமூல ஆக்கிரமிப்பை சிலர் வெளிக்காட்ட முனைந்தாலும் இதுவரையில் உலகியல் சார்ந்த சமயச் சார்பற்ற அதிகார ஆட்சியே நிலைத்துள்ளது. ஆங்கில மொழி அனைத்து மாநிலங்களையும் ஒன்றிணைத்துள்ளது.

எமது அண்டை நாடாகிய இந்தியா வளர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு நாங்களும் புளகாங்கிதம் அடைகின்றோம். எமது மக்கள் பேரினவாதத்தால் துரத்தியடிக்கப்பட்ட போது எமது மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து எமது தலைவர்களை அங்கீகரித்து நாம் இந்த நாட்டிலே சமமான பிரஜைகளாக வாழ வேண்டும் என்பதற்காக தொடர்ந்து வந்த இந்திய அரசுகள் எடுத்த நடவடிக்கைகளுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாங்கள் சம உரிமை உடையவர்களாக எமது தாயகப் பிரதேசத்தில் எமது விடயங்களை நாங்களே கையாளக்கூடியவர்களாக சுயமரியாதையுடன் வாழ்வதற்கு தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த போராட்டத்திற்கு இந்தியா என்றும் துணை நிற்கும் என்ற வலுவான நம்பிக்கை எமக்குண்டு உண்மையில் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் கொண்டு வந்த போது பாரதத்தின் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து உரித்துக்களையும் வடகிழக்கு மாகாணங்கள் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் 1987ஆம் ஆண்டில் கருத்தாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் தெற்கு அரசியல்வாதிகளின் பேரினவாதம் அதற்குத் தடையாக நின்றது. இன்றும் நிற்கின்றது. இந்நாடு ஒரு இன மக்களுக்கே உரியது. மற்றைய இனங்கள் அந்தப் பெரும்பான்மை இனத்தவர்களை சுற்றிப் பயணிக்கின்ற கொடிகளாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் வரையில் முரண்பாடுகள் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

உங்களுடைய சுதந்திரத்தை எங்களது சுதந்திரமாக நாங்கள் கொண்டாடியதுண்டு. பாரதியின் சுதந்திரப் பாடல்களைப் பாடிய ஞாபகங்கள் மனத்திரையில் வித்திட்டு நிற்கின்றன.

தந்தை மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட போது எமது உறவினர் ஒருவரை இழந்தது போன்று நாங்கள் துயருற்றோம். ஓரிரு நாட்கள் சாப்பிட மறுத்தது ஞாபகம் வருகின்றது.

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அநுராதபுரத்தில் தந்தையாரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ரேடியோ அண்டையில் இருந்து தேம்பித் தேம்பி அழுதது ஞாபகம் வருகின்றது. வெட்கத்தை விட்டு எனது பெற்றோர்களும் சேர்ந்து அழுதது ஞாபகம் வருகின்றது. அந்தளவுக்கு காந்திஜி மீது எமக்குப் பற்றிருந்தது, பாரத மக்கள் மீது பாசம் இருந்தது.

வெள்ளையர் எம்மை விட்டுச் சென்ற போது இலங்கை இந்திய மக்கள் யாவருமே ஒரு தாய் மக்களாகவே எம்மை எண்ணிக் கொண்டோம்.

எம் அனைவருக்கும் காந்திஜி தந்தையாராகக் காட்சி அளித்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஒற்றுமையின் சின்னமாக காந்திஜி விளங்கினார்.

ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு முன்னேறலாம் என்ற எண்ணம் இந்தியாவிலும் இலங்கையிலும் அப்போது இருந்தது.

ஆனால் அரசியல் எம்மை ஆழ்கடலுக்குள் அமுக்கி விட்டுள்ளது. இந்தியா சுதாகரித்துக் கொண்டு முன்னேறுகின்றது.

நாங்களோ எதிர்பார்ப்புக்களில் காலம் கடத்தி வருகின்றோம். இந்திய நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாடு எம்மையும் பீடிக்க வேண்டும் அப்பொழுது தான் எமக்கு விமோசனம் உண்டு.

120 கோடி சனத்தொகையைக் கொண்ட வல்லரசாக வளர்ந்து வருகின்ற இந்தியா பல்லாயிரம் சுதந்திர தினங்களைக் கொண்டாட வேண்டும் என வாழ்த்தி எனது உரையை நிறைவு செய்கிறேன் என முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெனீஸ்வரனுக்கு...

அமைச்சர் டெனீஸ்வரனுக்கு எதிராக எமது கட்சியினால் ஒழுங்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அதனை சுமுகமாக தீர்த்துக்கொள்ள அவருக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை, அவர் தவறவிட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை நிகழ்ந்த எமது கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்தில், அவர் சமுகமளித்து, முதலமைச்சருக்கு எதிரான தனது நடவடிக்கை தொடர்பில் விளக்கமளித்திருந்த சூழ்நிலையில், அமைச்சர் பதவியை அவர் தாமாகவே துறக்குமிடத்து, அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை சுமுகமாக முடிவுக்கு கொண்டுவரப்படுமென அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அவர் பதவியை இராஜினாமா செய்வது பற்றி சிந்தித்து முடிவெடுப்பதற்காக ஒருநாள் அவகாசமும் வழங்கப்பட்டது.

ஆயினும், அமைச்சர் டெனீஸ்வரன் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தை நிராகரித்து, அதனை செய்தியாளர் மாநாட்டிலும் தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில், மேலும் காலம் தாமதிக்காது, ஒழுங்கு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் கட்சிக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில், கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தை எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## அரசுக்கு எதிராக...

செய்து வருகின்றது.

இப்போராட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள பொது எதிரணியினர்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள போதிலும் இதுவரை நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை.

சரியான தொலைநோக்கு இல்லாமல் கண்மூடித்தனமாக எடுக்கப்படும் தீர்மானங்களாலும், முன்னெடுக்கப்படும் திட்டங்களாலும் நாட்டின் பொருளாதாரம் முற்றாக சீர்குலைந்து போயுள்ளது.

நீதியும் நியாயமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு அராஜகமும் அடக்குமுறைகளும் கோலோச்சி வருகின்றன.

அரசியல்வாதிகளும் அவர்களது அடிவருடிகளும் சுகபோகத்தில் திளைத்திருக்கும் போது பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தத் திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே சரிந்து போயுள்ள பொருளாதாரம் அதள பாதாளத்தைநோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்த நாட்டுக்கு விமோசனமொன்று ஏற்படவேண்டுமானால் இந்த அரசு தூக்கியெறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகவே இந்த ஒருவார காலப் போராட்டம் நடைபெறவுள்ளது என்று பொது எதிரணியினர் தமது பரப்புரையில் தெரிவித்துள்ளனர். (செ-11)

## ஊழல் நிவாரண...

மோசடி இடம்பெறுவதற்கு முன்னதாக அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன குறிப்பிட்டார்.

உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளில் இத்தகைய பிரிவுகள் இயங்குவதுடன், அவற்றின் ஊடாக ஊழல் மற்றும் மோசடிகளை தடுக்க முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊழல் மோசடி ஏதேனும் இடம்பெறுமானால் ஊழல் நிவாரண புதிய பிரிவின் ஊடாக அதுகுறித்து முன்கூட்டி அறிந்துகொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

ஊழல் நிவாரண பிரிவின் ஊடாக அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகள் மற்றும் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## பொலிஸ்-மக்கள்...

ட்டிய சுமணரத்ன தேரர் உள்ளிட்ட பொது மக்கள் அத்து மீறி நுழைய முற்பட்டபோது, அந்த இடத்தில் ஓரிரு மணிநேரம் பதற்றம் ஏற்பட்டது.

நீதிமன்ற தடை உத்தரவை மீறியும், காணியின் வேலியை அகற்றியும் உள்ளே நுழைய முற்பட்டவர்கள் அனைவரும், அங்கு தயார் நிலையில் காணப்பட்ட பொலிஸாரால் தடியடி நடத்தப்பட்டு கண்ணீர் குண்டுகள் வீசியும் கலைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முறாவோடை அரசு தமிழ் பாடசாலைக்கு அருகிலுள்ள இந்த காணி, கிராமத்தின் தமிழ்-முஸ்லிம் பிரிவுகளின் எல்லையில் காணப்படுகின்றது.

இந்த காணி அரசு தமிழ் பாடசாலைக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் என பாடசாலை நிர்வாகத்தினாலும் உள்ளூர் தமிழ் மக்களினாலும் சொந்தம் கொண்டாடப்படுகின்றது.

காணியின் ஒரு பகுதியை, முஸ்லிம்கள் அபகரித்துள்ளதாக குற்றஞ்சாட்டும் தமிழர் தரப்பு, அவ்விடத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்ற வேண்டும் என்று போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

தங்களிடம் இந்த காணியின் உரிமை தொடர்பான சட்ட ரீதியான ஆவணங்கள் இருப்பதாக் முஸ்லிம் தரப்பும் கூறுகின்ற நிலையில் சமீபகாலமாக இன ரீதியான முரண்பாடுகளும் அந்த பகுதியில் நிலவுகின்றன.

நேற்று செவ்வாய்க்கிழமை அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர், அந்த பகுதியை சேர்ந்த தமிழர்கள் காணியின் எல்லைகளை அகற்ற நுழைய முற்பட்ட வேளையில், அங்கு தயாராக இருந்த பொலிஸாரால் தடுக்கப்பட்டுள்ளனர்.

காணிக்குள் வெளியாட்கள் யாராக இருந்தாலும் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள நீதிமன்ற உத்தரவை பொலிஸார் அந்த இடத்தில் காட்டியபோது, அந்த உத்தரவை பௌத்த மதகுரு ஒருவர் கிழித்துவிட்டதாக கூறப்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் பதற்றம் ஏற்பட்ட நிலையில், அங்கு தயாராக இருந்த பொலிஸார் தடியடி பிரயோகம் செய்தும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கூட்டத்தை கலைத்து சுமுக நிலையை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரின் இந்த தாக்குதலின்போது, பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த இடத்திற்கு சென்றிருந்த கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அனுர தர்மரத்ன, இரு தரப்பு ஆதாரங்களையும் ஆராய்ந்து காணி உரிமை தொடர்பான முடிவை இன்று புதன்கிழமை அறிவிப்பதாக தெரிவித்திருக்கின்றார். (செ-11)

## பொலித்தீன் தடை;...

மற்றும் கழிவகற்றல் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இலங்கையின் உயர் அடர்த்தி பொலித்தீன் மற்றும் மீள்சுழற்சி கைத்தொழிலில் உள்ளவர்கள் இத்தடைக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இத்தடையினால் நாடு பூராகவும் உள்ள 345,000 பேர் தமது தொழில்களை இரவோடு இரவாக இழப்பார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீள் சுழற்சி சங்கத்தின் தலைவர் அனுரா விஜயதுங்க உட்பட 300க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்களுக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அமைச்சின் உயர் நிலை உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் வருடாந்த பொலித்தீன் உற்பத்தியில் 80 சதவீதமானவை அதிஅடர்த்தியில் உள்ளன. மேலும் ஏனைய 20 சதவீதமானவை குறைந்த அடர்த்தியில் உள்ளன. உயர் வலு காரணமாக அவை சுற்றாடலுக்கு தீங்கு விளைவிப்பதாக கருதப்படுகிறது. வருடாந்தம் உற்பத்தியாளர்கள் 40 மில்லியன் அதி அடர்த்தி கொண்ட பொலித்தீனை உற்பத்தி செய்கிறார்கள்.

இது செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து தடை செய்யப்படுகிறது. வருடாந்த அதி அடர்த்தி கொண்ட பொலித்தீன் உற்பத்தியின் பெறுமதி 12.87 பில்லியன் அமெரிக்க டொலராகும். அத்துடன் இத்துறையில் 345,000 ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 45,000 பேர் நேரடியாகவே தொழில் புரிபவர்கள்.

பொலித்தீன் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. நாங்களும் சுற்றாடலை பாதுகாப்பதற்கு உதவியாக இருக்க விரும்புகிறோம். 800 அதி அடர்ந்த இயக்குநர்கள் தமது கைத்தொழில்களை மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த தடை அறிவிக்கப்பட்டதன் பின்பு பணப்பரிமாற்றத்தில் நாம் மிகவும் மோசமான நிலையில் உள்ளோம். எவரும் பணம் தர முன்வருகிறார்கள் இல்லை. இதனால் இக் கைத்தொழிலை தொடர்ந்து நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

முழுமையாகவே அதி அடர்த்தி கைத்தொழில் ஒரு ஸ்தம்பித நிலை அடைந்துள்ளதாகவும் அத்துடன் இத்தடை பற்றி முன் அறிவித்தல் எதுவும் கொடுக்கப்படவில்லை என இச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)

# பொலிஸ் சேவையில் இணைய தமிழர்கள் முன்வர வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் சேவையில் இணைய தமிழ் இளைஞர் யுவதிகள் முன்வரவேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சருக்கும் யாழ் மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்திகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் முதலமைச்சருடைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அந்த கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

தற்போது பொலிஸ் சேவையில் தமிழ் பொலிஸாரின் ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 474 ஆளணி வெற்றிடங்கள் உள்ளன. பொலிஸ் கான்ஸ்டபிள் வெற்றிடத்துக்கு 20 பேர் விண்ணப்ப படிவங்களை பெற்றுச் சென்றிருந்த போதிலும் இருவர் மட்டுமே விண்ணப்பித்துள்ளார். உதவி பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 18 விண்ணப்பங்களை பெற்று சென்றிருந்த போதிலும் இதுவரை ஒருவர் மட்டுமே விண்ணபத்துள்ளார்.

எமது இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைவதற்கு விருப்பப்படுவதாக தெரியவில்லை. கூடுதலாக இளைஞர் யுவதிகள் இணைய வேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன்.

தமிழ் தெரிந்த பொலிஸாரின் குறைபாடுகள் அதிகமாக உள்ளது என பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மக்கள் முறைப்பாடுகள் தெரிவிக்க வரும் போதும், நீதிமன்றங்களுக்கு செல்லும் போதும் தமிழ் தெரிந்த பொலிஸார் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இல்லாத காரணத்தினால் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இளைஞர்களின் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. வறுமை நிமித்தம் நன்றாக படிக்க கூடிய மாணவர்கள் பலர் பாடசாலையில் இருந்து இடைவிலகுகிறார்கள். அவர்களுக்கு புலமைப்பரிசில் ஒன்றை உருவாக்கி தொடர்ந்து படிக்க உதவி செய்வது தொடர்பில் முடிவெடுத்துள்ளோம்.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்று வந்த குற்றச்செயல்கள தொடர்பில் ஒரு மாதத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆவா குழு சம்பந்தப்பட்ட பலரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீதிமன்றங்களில் குடும்ப சச்சரவுகள் பல உள்ளது என சுட்டிக்காட்டியிருந்தனர். குடும்ப நல ஆலோசகர்களை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. முன்னைய காலத்தில் குடும்ப ஆலோசகர்கள் பலர் இருந்தார்கள் குறைகளை நிவர்த்தி செய்து குடும்பத்தினரை சேர்த்து வைத்தார்கள். அதே போன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சட்டத்துக்கு புறம்பான விதத்தில் இடம் பெறும் கடத்தல்கள் தொடர்பாக பேசப்பட்டது ஒரு மாதத்தில் முன்னேற்றம் உள்ளது. என தெரிவித்துள்ளார்கள். கழிவுகள் அகற்றுவது தொடர்பான பிரச்சினைகள் பேசப்பட்டது அதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டாக்காலி நாய்கள், மாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதே போன்று மேலும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. ஒவ்வொரு மாதமும் பொலிஸாருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அவர்களுடைய குறைகள் நிறைகள் தொடர்பில் கலந்துரையாடுவதால் பல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எமக்கும் பொலிஸாருக்கும் இடையில் உள்ள புரிந்துணர்வு மக்களுக்கு நன்மையை கொண்டு வரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

யாழ்.குடாநாட்டில் உருவாகியுள்ள வாள்வெட்டு குழுவினருக்கு உதவிகள் செய்பவர்கள் மற்றும் அதனை இயக்குபவர்கள் தொடர்பாக பொலிஸார் ஆராய்ந்து வருகிறார்கள். யேர்மன் நாட்டில் உள்ள ஒருவர் நிதி வழங்குவதாகவும் அது தொடர்பான விபரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று போராட்டம்

(மட்டக்களப்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியும் காணாமல் போனவர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலளிக்க வேண்டும் என கோரியும் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகித்து அரசியல்கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி பொது மக்களால் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வாழைச்சேனை பிரதேசத்தில் காணாமல்போனவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த தாய்மார் பலர் கலந்துகொண்டனர்.

தமிழர் தேசத்தை அங்கீகரி, அரசே தமிழர் வாழ்க்கையை சிதைக்காதே, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே, அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், வடக்கு கிழக்கு எங்கள் தாயகம், வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டும், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய் என பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் வாக்கில் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் எந்தவித கரிசனையும் காட்டுவதில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ் சுரேஸ் தெரிவித்தார்.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்வார்கள் எனவும் காணாமல் போனவர்களுக்கு நீதி வழங்குவார்கள் என எதிர்பார்த்த போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



## மின்னல் தாக்கி...

ளுடன் நேற்றைய தினம் அதிகாலை சென்றுள்ளார். கடலிலே 2 கிலோமீற்றர் தூரம் சென்ற போது காலை 5.30 மணியளவில் பெரிய சத்தத்துடன் மின்னல் ஒன்று அவர்களுக்கு அருகில் விழுந்துள்ளது.

மூன்று பேரும் கடலுக்குள் குப்புற விழுந்துள்ளனர். சிறிது நேரம் கழித்து ஏனைய இரண்டு பேரும் எழுந்து பார்த்த போது மேற் குறித்த நபர் தண்ணீருக்குள்ளேயே கிடந்துள்ளார்.

இதனை அவதானித்த ஏனைய மீனவர்கள் இருவரும் அவரை தூக்கிய போது கால்களில் எரிகாயங்கள் இருந்ததை அவதானித்துள்ளனர். உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்மரணம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9-10-30-106-109)

## மகிந்தவின் மனை...

களை துரிதப்படுத்த நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நடவடிக்கையின் முன்நகர்வாக,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் சுமார் 3 மணி நேரம் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் போது செஞ்சிலுவை சங்கத்தால் சிரிலிய அமைப்புக்கு வழங்கப்பட்ட டிப்பெண்டர் ரக வாகனத்தின் நிறத்தை மாற்றி, யோஷித்த ராஜபக்ஷவின் உபயோகத்துக்கு பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்ய அவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் குற்றப் புலனாய்வு பிரிவில் முன்னிலையானார்.

இதையடுத்து, சுமார் 3 மணிநேரம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டு, பிற்பகல் 1.10 மணியளவில் குற்றப்புலனாய்வு பிரிவிலிருந்து அவர் வெளியேறியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வரான ரோஹித ராஜபக்ஷ, பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில் 320 மில்லியன் செலவில் விண்ணுக்கு ஏவப்பட்டதாக கூறப்படும் சுப்ரீம் செட் வன் செய்மதி திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் மற்றுமொரு புதல்வரான யோஷித்த ராஜபக்ஷ, ரக்பி வீரர் தாஜுடீன் படுகொலை தொடர்பில் இன்றைய தினம் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளார். (செ-11)

## அதிகாரங்களை...

ள்ளது. அனைத்து கட்சிகளினதும் இணக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த வரைபில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கையெழுத்திடவில்லை.

சுதந்திரக் கட்சியின் மகிந்த தரப்பும் எப்படியும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கப்போவது இல்லை. எனவேதான் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கு சுதந்திரக் கட்சி எதிர்ப்பினை வெளியிட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை அவதானிக்கையில் விஜயதாச ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவின் உதவியாளரா என்ற சந்தேகம் எழுகின்றது. வேறு ஒரு அரசாங்கத்தை அமைப்பதில் பிரச்சினை இல்லையென பிரதமர் ரணில் கூறுகின்றார்.

லக்ஷ்மன் கிரியெல்லவும் வேறு ஒரு அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பேசுகின்றார். மக்களை ஒன்றிணைக்கும் ஒரு அரசாங்கமா? அல்லது சிங்களவாதிகளின் அதிகாரத்திற்கு அடிபணிந்து செல்லும் நிலைமைக்கா? நாடு செல்கின்றது என்ற உச்சகட்ட யுத்தம் எதிர்வரும் வாரங்களில் உதயமாகும்.

இதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும். இந்த நாட்டை மதவாதிகள், இனவாதிகள் அதால பாதாளத்தில் தள்ள இடமளிக்கப்போவது இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-11)

## சீனிக்கான வரி...

தெரிவித்தது.

வரி அதிகரிக்கப்படுவதன் ஊடாக உள்நாட்டு சந்தையில் சீனியின் விலை உயர்வடையாது என நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டது.

உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியது.

உலக சந்தையில் ஒரு கிலோகிராம் சீனியின் விலை 10 ரூபாயால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் நிதி அமைச்சு வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## வாள்வெட்டு; இளை...

அண்மைக் காலமாக அதிகரித்து வரும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவு, குற்றத்த[illegible] பிரிவு, விசேட அதிரடிப்படையினரின் தேடுதல் நடவடிக்கையின் மூலம் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் நேற்று அதிகாலை விசேட அதிரடிப் படையின் ரோந்து நடவடிக்கையின் போது, சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அப்போது அவருடைய தொலைபேசியில் வாள் வெட்டு குழுக்களுடன் தொடர்புடையதான புகைப்படங்கள் காணப்பட்டுள்ளன. அதனடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 20 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)


அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9331)
CSE COLOMBO STOCK EXCHANGE

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
1 Kg கட்டணம்
Germany --650/=
Swiss --750/=
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
216, K.K.S Road, Jaffna.
0777554528
(146)

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
(C-9275)
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(சி-9335)
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம் 26 . 11 . 1944

மறைவு 19 . 05 . 2017

அமரர்

## சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால்

(ஜெகா மோட்டோர்ஸ் உரிமையாளர்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (17.08.2017) வியாழக்கிழமை அன்று மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இந்து பாடசாலை வீதி, வல்வெட்டி.

தகவல்: ஜெகா மோட்டோர்ஸ் குடும்பத்தினர் - 0777630152

(142)


NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.


### க.பொ.த(உ/த) 2018 உயிரியல் மாதாந்தத் தொடர் பரீட்சை – ஜூன் 2017

### S.Ponthivakaran

| Index No. | முழுப்பெயர் | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/2149/B | ஆதிரை மணிவண்ணன் | J/M.L.C | 87 | 1 |
| J/2334/B | பாஸ்கரன் பார்த்திபன் | J/K.H.C | 87 | 1 |
| J/2082/B | சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 85 | 3 |
| J/2057/B | கிறேசியன் ஜெனோசன் | J/S.H.C | 81 | 4 |
| J/2110/B | டுஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 80 | 5 |
| J/2053/B | ஜெயகுமார் தேனுஜன் | J/J.H.C | 80 | 5 |
| J/2552/B | சிறியதாஸ் துவாரகன் | J/K.H.C | 78 | 7 |
| J/2298/B | கஜானா சிவயோகராசா | J/K.H.C | 76 | 8 |
| J/2146/B | செளயந்தி காயாரோகணன் | J/C.G.C | 75 | 9 |
| J/2143/B | அனிஸ் புளோரிடா இருதயநாதன் | J/K.H.C | 74 | 10 |
| Bd/2644/B | பாலசுப்பிரமணியம் யுகேந்திரன் | Bd/U.S.C | 74 | 10 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C | 74 | 10 |
| J/2085/B | கதிர்காமநாதன் சாயிந்தன் | J/K.H.C | 72 | 13 |
| Mu/2290/B | கேதாரணி ஜெகராஜன் | Mu/P.M.V | 72 | 13 |
| J/2218/B | சுப்பிரமணியம் சுபாசன் | J/J.H.C | 70 | 15 |
| J/2579/B | சிஸ்மியா முருகவடிவேல் | J/C.G.C | 68 | 16 |
| J/2153/B | ஆரணி துரைசிங்கம் | J/K.H.C | 67 | 17 |
| J/2219/B | சிந்துஜா அருள்ஜோதி | J/J.H.L.C | 63 | 18 |
| Mu/2694/B | அக்ஷயா ஸ்ரீகுமார் | Mu/C.M.V | 62 | 19 |
| J/2280/B | சங்கவி சகாயருபன் | J/V.G.H.S | 62 | 19 |
| J/2228/B | அகஸ்திகா வைத்திலிங்கம் | J/C.G.C | 57 | 21 |
| J/2294/B | றிஸ்மி லெஸ்லி பாஸ்கரதேவன் | J/V.G.H.S | 56 | 22 |
| J/2363/B | சர்மிலா ஸ்ரீதரன் | J/V.C | 56 | 22 |
| J/2056/B | பவீகா குகநேசன் | J/C.G.C | 54 | 24 |
| J/2094/B | தனராகவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 54 | 24 |
| J/2181/B | தர்சிகா குணபாலன் | J/V.G.H.S | 54 | 24 |
| Mu/2693/B | ஜெயபிரித்தா ஜெகதீஸ்வரன் | Mu/C.M.V | 52 | 27 |
| J/2107/B | டிலக்சியா நவரத்தினம் | J/J.H.L.C | 50 | 28 |
| J/2235/B | கஜலஷ்மி புஷ்பாகரன் | J/V.G.H.S | 50 | 28 |
| J/2264/B | சஸ்ரீபா சந்திரகுமார் | J/J.H.L.C | 50 | 28 |
|  | ரொபிற்றா ரவீந்திரன் | J/P.G.H.S | 49 | 31 |
| J/2642/B | பவதர்சினி பழனிபபழம் | J/V.G.H.S | 48 | 32 |
| J/2384/B | ஜெரோமி சிவனேசன் | J/V.G.H.S | 48 | 32 |
| J/2680/B | டிலக்சகா தங்கராஜா | J/I.C.M.V | 46 | 34 |
| J/2147/B | வைஷ்ணவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 44 | 35 |

(சி-9340)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org